# சாயி மகராஜ் குருவை தேடி
# SAI MAHARAJ GURUVAI THEDI



| ஆண்டு: 3 | இதழ்: 12 | மே - 2022 | விலை - ரூ.10/- |
|---|---|---|---|
| VOL:3 | ISSUE: 12 | May - 2022 | Rs. 10/- |






## உழவாரத் தொண்டன் திருநாவுக்கரசர்..!

## தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!




* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

## சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்




100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்




## அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

## அமிர்தா வேலம்பட்டை பல்பொடி




பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068

**சாயி மகராஜ் குருவை தேடி**
**SAI MAHARAJ GURUVAI THEDI**
**ஆண்டு-3 மலர்-12 மே - 2022**

வெளியிடுபவர் / ஆசிரியர்
**V.ஸ்ரீராம்**

கௌரவ ஆசிரியர்
**திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்**

விளம்பர பிரிவு
**திரு.T. கார்த்திகேயன்,** கோவை

கௌரவ ஆலோசகர்கள்
**திருமதி. S.சாந்தி,** சென்னை.
**திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி,** சென்னை.
**திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.**
**திரு. B.முருகன்,** சோழவந்தான்.
**செல்வி. S.சௌம்யா,** சென்னை.

இதழ் வடிவமைப்பு
**சிகரம் பப்ளிகேஷன்**

**உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-**

**V.ஸ்ரீராம்**
**எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.**
**செல்: 99418 16692,88258 31068.**

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



# என் அன்பு குழந்தாய்!

யாரை நீ நல்லவர்கள் என்று நினைத்தாயோ,அவர்களே உனக்கு துரோகம் செய்கிறார்களே என்று வருந் துகிறாய். நீ செய்த மிக பெரிய தவறு எது தெரியுமா! நல்லவர்களை தவிர்த்து விட்டு தீயவர்களை நம்பியது தான்.

வாழ்வில் நீ எதையெல்லாம் நிரந்தரம் என்று நினைத்தாயோ, அவை எல்லாம் நிதர்சனம் இல்லாத பொய்கள். முதலில் அதை நீ புரிந்துக் கொள்ள வேண்டும். அவர்களால் உனக்கு ஒரு நன்மையும் இல்லை என்பதை உணர்ந்து கொள்.

அன்பு குழந்தையே! உன் வெகுளிதனத்தையும், அப்பாவி குணத்தையும், பார்த்து உன்னிடம் அவர்கள் நாடகமாடுகிறார்கள்.

ஆயினும் இன்னும் அவர்களுக்காக நீ வருந்துவதை பார்த்து நான் கண் கலங்காத நாளே இல்லை. இருப்பினும் உன் கர்மா தீரட்டும் என்று காத்திருந்தேன்.

போனது போகட்டும் இனி உன்னை நான் அப்படி விடமாட்டேன். யாரவது உன்னை ஒதுக்கி வைத்தால் கவலை படாதே. உன்னை எந்த தூரத் தில் வைக்கிறார்களோ அந்த தூரத்தில் வாழ கற்றுக்கொள். உன்னோடு நான் இருக்கிறேன் இது சத்தியம்!

**- பகவான் ஸ்ரீ சாயிபாபா**

**ஆசிரியர் பக்கம்...**



# அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

சற்குரு சாயிநாதரின் அருளால் நாற்பத்து ஆறாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 10.04.2021 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது ஸ்ரீ சாய்ராம் ஆத்ம ஞான சபையில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை23) நடைபெற்றது.

இம்மாதம் புத்தக வெளியீடும், இராம நவமி திருவிழாவும் ஒருங்கே கொண்டாடப்பட்டது. காலை 6 மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் விழா ஆரம்ப மானது. தொடர்ந்து தியானம் நிகழ்ச்சியும், "சாயி காணக்குயில்" திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார், குழுவினரின் (திருமதி.ஜானகி சீனிவாசன், திருமதி.சுமதி இராமூர்த்தி, செல்வி. அட்சயா,அபிநயா, அமிர்தா, ஸ்ரீ அட்சயா) பஜனை நிகழ்ச்சியும், அதைத் தொடர்ந்து, "பாராயணப்பகலவன்" திரு.சாய்சுந்தர் அவர்களின் சொற்பொழி வும் நிகழ்ந்தன.

அதைத்தொடர்ந்து ஆசிரியர் அவர்கள் இம்மாத இதழ் உருவான விதம் பற்றி பேசினார்கள். தொடர்ந்து இம்மாதப் புத்தகத்தை திரு. சாய் சுந்தர் அவர்கள் வெளியிட திருமதி. ஜானகி சீனிவாசன், திருமதி. சுமதி இராம மூர்த்தி, திருமதி ஜெயலட்சுமி தேவக் குமார் ஆகியோர் பெற்றுக் கொண்டு சிறப்பித்தனர்.

விழா நிறைவு பெறும் நேரத்தில் சாயியின் அனுக்கிரகத்தால் எதிர்பாரா மல் குருவருள் வேண்டி திரு. அசோக்குமார் அவர்கள், தன்னுடைய "சாரதி" திரு. திருநாவுக்கரசு அவர்க ளுடன் வந்து விழாவில் கலந்து கொண்டு எங்களுக்கு இன்ப அதிர்ச்சி அளித்தார். அவருடைய ஆன்மீக சேவைகள் பல்லாண்டு காலம் தொடர நீள் ஆயுள், நிறை செல்வம், வான் புகழ் பெற்று, ஆயுள் ஆரோக்கியத்துடன் பல் லாண்டு காலம் வாழ்க வளமுடன் என்று பகவான் சாயிநாதரிடம் பிரார்த்திக்கின்றோம்.

இம்மாதம் நமது இதழுக்கு ஈரோடு மாவட்டம், பவானியைச் சேர்ந்த அன்புச்சகோதரி, திருமதி. ரஞ்சனி அவர்கள் மூன்று வருட சந்தாதாரர்கள் நான்கு நபர்களையும், ஒர் வருட சந்தாதாரர்களில் மூன்று நபர்களையும் இணைத்து சாயி சேவை செய்துள்ளார்.



அவரும் அவரது குடும்பத்தினர் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று பகவான் சாயிநாதரின் ஆசியோடு வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகிறோம்.

பகவான் சாயி பாபாவின் புகழ் பரப்பும் இந்த இதழ் உங்களுக்கு பிடித்திருந்தால், இதில் வரும் கருத்துக்கள் அனைவருக்கும் சென்று சேரவேண்டும் என்று நினைத்தால் நீங்களும் சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு சந்தாதாரர்களை இணைத்து, இதழ் தொடர்ந்து வெளிவர சாயி சேவை செய்யும்படி வேண்டுகின்றோம்.

இன்றைய காலகட்டத்தில் உலக மனித இனம் பல்வேறு வகையில் பல இன்னல்களை சந்தித்து வருகின்றது. போர், பகை, வறுமை, பொருளாதார வீழ்ச்சி, மத, இன, துவேசங்கள், உலக தலைவர்களிடையே "நான்" என்ற அகங்காரம் இவை எல்லாம் நிச்சய மாக மனித இனத்தை முன்னேற்ற பாதையில் அழைத்துச் செல்ல வாய்ப்பில்லை.

எனவே வாழும் காலத்தில் நாம் அனைத்தையும் எதிர் கொண்டு மன நிம்மதியோடு வாழ வேண்டுமாயின், பகவான் சாயிநாதரின் வழிகாட்டுதல் ஒன்றே நிதர்சனமானவை என்பதை நன் குணர்ந்து அவ்வழியே செல்வதே அறிவுடைமையாகும்.

இதழ் வெளியீட்டை ஒட்டி ஏழை எளியவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று அன்ன தானம் வழங்கப்பட்டது.

பகவான் சாயிநாதரின் அருளால் மிக விரைவில் உலகெங்கும் பரவியிருக்கும் பெருந்தொற்று கட்டுக்குள் வந்து உலக மாந்தர்கள் அனைவரும் நிம்மதியுடனும், ஆரோக்கியத்துடனும், வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம்.








மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!

**வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!**

**- அன்புடன் ஆசிரியர்.**

# சாயி வளர்த்த துனி!



சீரடி சாயிபாபா எந்த நாளில் துவாரகாமாயி வந்தடைந்தார். எந்த இடத்தில் வசித்தார். எங்கு உறங்கினார். என்பது யாருக்கும் தெரியாது. துனி என்ற அக்கினியை மூட்டுவது அவருக்கு புதிதல்ல. சாந்துபாயி பாட்டீல் காணாமல்போன தன் குதிரையை தேடும்பொழுது, பாபா தன் கையில் இருந்த சட்காவினால் பூமியில் இருந்து நெருப்பையும், நீரையும் வரவழைத்தார்.

சாயி துவாரகாமாயியில் துனியை எந்த தெய்வீக அக்னியால் ஏற்றினார் என்பதற்கு ஆதாரம் இல்லை. அது அவர் மட்டுமே அறிந்த ரகசியம். சாயி ஏற்றிய துனி பூமியில் கிடைக்கும் கட்டைகளால் ஏற்றப்படவில்லை என்பது சர்வ நிச்சயம்.

ஏனென்றால், சாதாரண கட்டை களில் இருந்து ஏற்றப்படும் அக்னி மிகவும் சக்தி வாய்ந்ததாகவும், புகழ் பெற்றதாகவும் இருக்க முடியாது அல்லவா? துவாரகாமாயியில், சாயிபா பாவினால் வளர்க்கப்பட்ட நித்ய அக்னியே துனி. அதிகாலையில் சூர்ய உதயத்திற்கு முன்பே எழுந்து துனியைப் பார்ப்பது பாபாவின் வழக்கம்.

அக்னியை கூர்ந்து பார்ப்பது என்றால் ஒளிரும் தீப்பிழம்புகளை கண்கொடாமல் பார்ப்பது ஆகும். இதை அனைவராலும் பார்க்கமுடியாது. அதற்கு கடினமான பிரமச்சர்யம் அவசியம். மிக உயர்ந்த யோகிகள் தான் இதைச் செய்ய முடியும். சாயி இதை அனுதினமும் விடாது செய்தார்.

காலை நேரங்களில் பாபா துனிக்கருகில் அமர்ந்து, தன் விரல்களை மேல் நோக்கி காண்பித்து "அல்லா மாலிக்" என்பார். பாபாவின் விசித்திர செயல்களை எவராலும் அறிந்து கொள்ள முடியாது. என்று இந்நிகழ்வுகளை நேரில் கண்ட திருமதி தாராபாய் தர்கட் அவர்கள் கூறுகிறார்.

பாபா துனியின் அருகில் தெற்கு முகமாக அமர்ந்து சில சைகைகளை செய்வார். உடனே பணியாளர்கள் துனியை சுத்தம் செய்து, விறகுகளை அக்னியில் சேர்ப்பர். பாபா யாதே ஹக் என்று சில சொற்களை உச்சரிப்பார். அவை யாருக்கும் புரியாது. என்று அருகில் இருந்து கவனித்த ரகுவீர

பாஸ்கர புரந்தரே கூறுகிறார்.

பாபா துனி அருகில் அமர்ந்து காலை வேளையில் தன்னிடம் வரும் பக்தர்களிடம் பேசுவார். சாயி தன் சூட்சும சரீரத்துடன் இதர உலகத்திற்கு பயணித்ததையும், அங்கு ஆற்றிய பணிகளை பற்றியும் கூறுவார் என்று சி.ஜி.நார்கே கூறுகிறார்.

துவாரகாமாயி, மற்றும் சாவடியில் பாபாவுடன் உறங்கிய பக்தர்கள் பாபா இரவில் தன் பூத உடலுடன் சீரடியில் இருந்தார் என்று அறிவார்கள். ஆனால் சாயி தன் சூட்சும சரீரத்துடன் உலகை வலம் வந்து பக்தர்களை தன் குழந்தைகளைப் போல் பாதுகாத்தார் என்பதை அவரால் பயன்பெற்ற உலகம் முழுவதும் இருந்த அவரது பக்தர்களே அறிவார்கள்.

பாபா தான் பிச்சை எடுத்து கொண்டு வந்த உணவில் இருந்து கொஞ்சம் உணவை துனிக்குப் படைப்பார். ஒரு முறை சகுண் மேரு நாயக் எனும் பக்தரின் கனவில் தோன்றி, சாதமும் நெய்யும் கலந்து துனிக்கு படைக்கும்படி கூறினார். பின்னர் அவர் அதேபோல் துனிக்கும், பிறகு பாபாவிற்கும் படைக்கத் தொடங்கினார்.

அப்பபில் என்ற பக்தர் துனிக்கு வேண்டிய விறகுகளை கொடுத்து வந்தார். பாபாவிற்கு காட்டில் இருந்தும் விறகு கிடைக்கும். இராதாகிருஷ்ணாயி துனியில் சாம்பிராணி சேர்ப்பதை சாயி சரணானந்தா மூலம் ஆரம்பித்தார்.

சாயி நிறைய சந்தர்ப்பங்களில் தன் சற்குருதான் தனக்கு எல்லாம் என்றும், அவரை அவரின் சமாதிக்குப் பின்னும் வழிபடுவேன் என்று கூறினார். வாழ்நாள் முழுவதும் பிரமச்சர்யத்தை கடைபிடிப்பவர்கள் எப்பொழும் தன் குருவை பின்பற்றியே இருக்க வேண்டும். சற்குரு மோச்சம் அடைந்த உடன் சீடன் ஒரு புனித அக்னியை ஏற்படுத்தி அதை உயிருள்ள தன் குருவின் வடிவமாய் கருத வேண்டும். நம்முடைய வேதங்கள் இதை உறுதி செய்கின்றன. சாயிபாபாவின் துனியும் இதன் தொடர்ச்சியாக நிறுவப்பட்டதே!

முஜாபர் ஷா எனும் பெயருடைய புனித ஆத்மா சீரடியில் வசித்தார். பாபா அவருக்கு சேவை செய்தார். தன்னுடைய குருவை அடக்கம் செய்த இடத்தில்தான் பாபா துனியை ஏற்றினார் என்று கூறுகின்றார் சாய் சரணானந்தா.

துனி சாயிபாபா மகாசமாதி ஆகும் வரை தரையில் இருந்தது. பின்னர் ஒரு குழியில் வைக்கப்பட்டது. பிறகு கட்டடங்கள் கட்டப்பட்டது. 1998 ஆம் வருடத்தில் சீரடி சமஸ்தானத்தால் மறுகட்டுமானம் செய்து புகைபோக்கி நிறுவி நவீனமயமாக்கப்பட்டது.

பணியாளர்கள் பக்கவாட்டில் இருந்து துனியை சுத்தம் செய்து



உதியை எடுப்பர். துனி மாதாவின் கருணையால் இதுவரை யாருக்கும், எப்போதும் காயங்கள் பட்டதில்லை.

துவாரகாமாயி காலை 4.00 மணிக்கு திறக்கப்படும். துனி சுத்தம் செய்யப்பட்டு உதி எடுக்கப்படும். வரட்டிகள் மற்றும் விறகுகள் துனி மாதாவிற்கு சமர்ப்பிக்கப்படும்.

சிறிதளவு தனல் துனியில் இருந்த எடுத்து வரப்பட்டு சமாதியில் காலை 4.15 க்கு சாம்பிராணி காண் பிக்கப்படும். காலை 8.00 மணிக்கு உள்ளூர் மக்கள் துனி பூஜை செய்ய அனுமதிக்கப்படுவார்கள். காலை11.30 க்கு ஐந்து வகையான பாவங்களை சுத்தப்படுத்துவதற்கு சாயி சனஸ்தான், பக்தர்கள் சார்பில் துனிக்கு நெய், மற்றும் சாதம் சமர்ப்பிக்கப்படும். மாலை 3.40 க்கு வரட்டிகளை சனஸ்தான் அளிக்கின்றது. துனியில் எடுக்கப்பட்ட உதி பக்தர்க ளுக்கு கொடுக்கப்படுகின்றது.

பக்தர்கள் துனி பூஜை செய்யலாம். துனிக்கு வேண்டிய பொருட்களையும் கொடுக்கலாம்.

மனித குலத்தை நல்வழிப்படுத்தவே பாபா துனியை ஏற்படுத்தினார். மேலும் துனி ஒரு வரபிரசாதமாகவும், பாதுகாப்பாகவும், மற்றும் மருந்தாகவும் அமைந்துள்ளது. மக்கள் பாபாவிடம் துனி எதற்காக என்று கேட்ட போது, உங்கள் பாவங்களை எரிப்பதற்கு என்று பதில் கூறினார். துனியின் மூலம் மரண மடைந்த எல்லா சீவன்களையும் மேல் உலகத்தில் சேர்த்து விடுகிறேன் என்று பாபா கூறினார்.

சாயி பக்தர் சிவநேசன் சுவாமிகள் நிறைய பக்தர்களுக்கு துனியின் சிறப்பை பற்றி விளக்கினார். தற்போது நிறைய கோவில்களில் துனி அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு சமயம் சிவநேசன் சுவாமிக ளுக்கு ஒரு நபர் நஞ்சு கலந்த வாழைப் பழத்தை கொடுக்க, அதை சுவாமிகள் சாப்பிட்டுவிட்டார். அவரின் நாக்கு முனை இரண்டாக பிளவுபட்டு இரத்தம் சிந்தியது. நடந்ததை அறிந்து கொண்ட சுவாமிகள் உடனே துவாரகா மாயி சென்று உதியை எடுத்து உட் கொண்டார். உடனடியாக இரத்தக் கசிவு நின்றுவிட்டது. காயமும் மறைந்து விட்டது. பாபாவிற்கு நன்றியாக துனி வழிபாடு செய்தார். சுவாமிக்கு துனியின் மேல் பலத்த நம்பிக்கை இருந்தது.

ரஷ்ய வானிலை ஆய்வாளர்கள் சிலர் சீரடிக்கு வந்தபோது, துனியில் இருந்து வெளிவரும் புகையைப் பார்த்து அது மக்களை பாதிக்கும் என்று அதிர்ச்சி அடைந்தனர். சிவநேசன் சுவாமிகள் துனி பாபாவின் கைகளால் ஏற்றப்பட்டது. அது மக்களின் நலனை பாதிக்காது என்று வாதாடிப் பார்த்தார்.

விஞ்ஞானிகள் சீரடி மக்களை சோதித்துப் பார்த்தனர். பாதிப்பு எதுவும் தெரியவில்லை ஆயினும் பாபாவின் பெருமைகளை நம்பாமல் துனி ஏற்றுவதற்கு பயன்படும் பொருட்களை சோதித்துப் பார்த்தில் அதில் நச்சுப் பொருட்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனாலும் மக்களை அது பாதிக்கவில்லை. என்பதை உணர்ந்து சுவாமிகளிடம் மன்னிப்பு வேண்டினர்.

துனி ஓர் அற்புதம். அது சாயிபாபா வினால் பவித்ரம் செய் யப்பட்டது என்று மறுபடியும் அவர் களுக்கு எடுத்துக் கூறினார் சிவநேசன் சுவாமிகள். சாயி வளர்த்த துனியை வணங்குவோம்!

**உதியின் மகிமையை போற்றுவோம்!**

# சீரடி யாத்திரை

## சாய் தியானாலயா பிரார்த்தனை மையம் சார்பில் சீரடி புனித யாத்திரை

### 7 வது யாத்திரை வரும் 13.7.2022 அன்று புறப்படுகின்றது

**6 நாட்கள்:** *இரயில், பேரூந்து, தங்கும் அறை, தமிழக உணவு உட்பட நபருக்கு ரூ.6000/*

**பார்க்கும் இடங்கள்:** *சீரடி சாய் மந்திர், கந்தோபா ஆலயம், லெண்டிபார்க், அருங்காட்சியகம்,அனுமன் கோவில் அப்துல்லா காட்டேஜ், லெட்சுமிபாய் வீடு, மகல்சாபதி வீடு, பயாஜி கோதே வீடு, அவுரங்காபாத் எல்லோரா, கிரிஷ்னேஸ்வர் ஜோதிர்லிங்கம் சிவநேசன் சமாதி, சகோரிஉபாசினி மகராஜ், கணபதி கோவில்.*

### 8 வது யாத்திரை, செப்டம்பர் 21.9.2022 அன்று புறப்படுகின்றது

**4 நாட்கள்.** *இரயில், பேரூந்து, தங்கும் அறை, தமிழக உணவு உட்பட நபருக்கு ரூ.4200/*

**பார்க்கும் இடங்கள்:** *சீரடி சாய் மந்திர், கந்தோபா ஆலயம், லெண்டிபார்க், அருங்காட்சியகம்,அனுமன் கோவில் அப்துல்லா காட்டேஜ், லெட்சுமிபாய் வீடு, மகல்சாபதி வீடு, பயாஜி கோதே வீடு,சிவநேசன் சமாதி, சகோரி உபாசினி சமாதி, கணபதி கோவில்,*

### 9 வது யாத்திரை, ஜனவரி 16.01.2023 அன்று புறப்படுகின்றது

**6 நாட்கள்.** *இரயில், பேரூந்து, தங்கும் அறை, தமிழக உணவு உட்பட நபருக்கு ரூ.6500/*

**பார்க்கும் இடங்கள்:** *சீரடி சாய் மந்திர், கந்தோபா ஆலயம், லெண்டிபார்க், அருங்காட்சியகம்,அனுமன் கோவில் அப்துல்லா காட்டேஜ், லெட்சுமிபாய் வீடு, மகல்சாபதி வீடு, பயாஜி கோதே வீடு, நாசிக் திரியகம்பேஸ்வர், பஞ்சவடி, சீதா குகை, காலாராம், சிவநேசன் சமாதி, சகோரி, கணபதி கோவில்.*

***ஆறு நாட்கள் குரு ஸ்ரீராம் சாய் அவர்களுடன் சத்சங்கம், தியானம், யோகாவுடன் ஓர் ஆனந்த பயண அனுபவம்.***

விபரங்களுக்கு: **சாய் தியானாலயா**

**9941816692, 88258 31068**

# சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

– ஜெயந்தி ஸ்ரீராம்

## லீலை: 6. சாய் தியானாலயாவிற்கு பாபா வருகை...

**எ**ன் கணவர் செய்து வந்து வியாபாரம் நஷ்டமடைந்து விட்டதால் நாங்கள் மிகுந்த கஷ்டத்தில் இருந்தோம். கையில் காசில்லாமல் வாழ்க்கையை தள்ளுவதென்பது சென்னையில் மிகவும் சிரமமாய் இருந்த நேரம் அது. குடும்பத்தை ஓட்ட ஏதாவது சம்பாதித்தாக வேண்டுமே என்று பலவாறாக சிந்தித்துக் கொண்டிருந்த நேரம்.

எங்களின் உறவினர் ஒருவர், வெகு தூரத்தில் சிறிய கிராமம் ஒன்றில் வசித்து வந்தார்கள். அவர்களது பெண்ணுக்கு திருமணமாகி குழந்தை செல்வம் இல்லை என்று குருவிடம் முறையிட்டார்கள். குருவோ பாபாவிடம் முறையிடுங்கள். நிச்சயம் உங்கள் குறையைத் தீர்ப்பார் என்று கூற, அவர்களும் சரி என்று கூறிவிட்டு, எங்கள் வீட்டில் வெகு நாட்களாய் பாபா சிலை வைத்து வழிபட வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

ஆனால் சரியான சிலையும் எங்களுக்கு அமையவில்லை. பாபாவை முறையாக வழிபடவும் வாய்பில்லை. என்று கூறி வருத்தப்பட, அதற்கு குருவோ, வேண்டுமானால் நல்ல படம் ஒன்று வாங்கித் தருகின்றேன்.என்று கூற, அதற்கு அவர்கள் இல்லை, இல்லை, எங்களுக்கு சீரடியில் உள்ளது



போன்ற சிம்மாசன அமைப்புடன் கூடிய சிலைதான் வேண்டும் என்று கூற, குருவும் அவரையறியாமல் அவ்வளவுதானே நானே செய்து தருகின்றேன் என்று கூறிவிட்டு ஊருக்கு வந்து விட்டார்.

ஊருக்கு வந்து ஒருவாரமாக மிகவும் சிரமப்பட்டு, சீரடியில் இருப்பது போன்று சிம்மாசனத்துடன் கூடிய பாபா விக்கிரகம் ஒன்றை உருவாக்கிவிட்டு உறவினருக்கு தகவல் அனுப்பினார். ஆனால் அவர்களோ, நீங்களே கொண்டுவந்து கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று கூறிவிட்டார்கள்.

சிலை செய்ய ஏற்கனவே 500 ரூபாய் கடன் வாங்கியாயிற்று.

அத்துடன் ஊருக்குச் செல்ல 500 கடன் வாங்கிக்கொண்டு சிலையை எடுத்துக் கொண்டு குரு ஊருக்குப் புறப்பட்டார்கள்.

ஊருக்குச் சென்று சிலையை எடுத்து குழந்தை வரம் கேட்ட பெண்ணிடம் கொடுத்ததுதான் தாமதம். அந்தப் பெண், சிலையை கையில் வாங்கியதுமே மயங்கிச்சரிந்தாள். உடனே அந்தப் பெண்ணை, அவளின் குடும்பத்தார் மருத்துவமனைக்கு இட்டுச் செல்ல, அவர்களின் இல்லத்தில் அவர்களுக்காக குரு மட்டுமே காத்திருக்கின்றார். மனதிற்குள் சிலைக்காக போட்ட முதலாவது திரும்ப வருமா என்ற ஏக்கத்துடன்.

மருத்துவமனையில் இருந்து மகிழ்ச்சியுடன் திரும்பிய குடும்பத்தினரைப் பார்த்து குருவிற்கு போன உயிர் திரும்ப வந்தது போலிருந்தது.

அந்தப் பெண் கர்ப்பமாக இருக்கின்றாள் என்ற இனிப்பான செய்தியையும் கூறி, எல்லாம் பாபா வந்த நேரம் தான் என்று குருவிடம் சிலைக்கான தொகையாக ரூ.2000 கொடுத்து அவரை ஊருக்கு அனுப்பி வைத்தார்கள்.

அதன்பின்தான் பாபா அதிசயம் செய்ய ஆரம்பித்தார். அந்த சிலையைப் பார்த்த அக்கம்பக்கத்தை சேர்ந்த பாபா பக்தர்கள், அவர்களுக்கும் அதேபோன்று பாபா சிலை செய்துதரும்படி கேட்க, குரு வேறு வழியில்லாமல் ஒத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. அப்புறம் என்ன? வாழ்க்கையில் அடுத்து என்ன செய்வது என்று குழம்பிக்கொண்டிருந்த குரு அவர்கள் பாபா சிலை செய்வதையே முழு மூச்சாக செய்ய ஆரம்பித்தார்.

அதுவும் எப்படி, செய்கின்ற சிலைகள் விற்கின்றதா? இல்லையா என்றெல்லாம் கவலைப்படமாட்டார். தொடர்ந்து விதவிதமாக, சிறிதும் பெரிதுமாக பாபா சிலைகளை செய்து வீடு முழுக்க நிறைத்து விடுவார். அந்த காலகட்டத்தில் வீடு முழுக்க எல்லா இடங்களிலும் பாபாவாகவே இருப்பார்.

எனக்கே சில நேரங்களில் நம்பிக்கையின்மை வந்து விடும். பைத்தியம் பிடித்தது போன்று பாபா சிலைகளை செய்து கொண்டே இருக்கின்றாரே, இவை எல்லாம் விற்பனை ஆகவில்லை என்றால் என்ன செய்வது என்று யோசிப்பேன்.

பாபாவின் லீலைகள் என்ன என்று அவ்வளவு சீக்கிரத்தில் நமக்கு தெரிந்து விடுமா என்ன? அன்றைய காலகட்டத்தில் இருநூற்றுக்கும் மேற்பட்ட சிலைகள் தயாரித்து இருந்தார் குரு. ஒரு மாதம் சென்றிருக்கும். யார் என்றே தெரியாதவர் ஒருவர் வந்து எனக்கு ஒரு பாபா சிலை வேண்டும் என்று கேட்டு வாங்கிச் செல்வார்.

வந்தவர்கள் எவ்வளவு விலை என்று கேட்டால் குரு விலையை கூறாமல் உங்கள் மனதிற்கு என்ன தோணுதோ அதை வைத்துவிட்டு எடுத்துச் செல்லுங்கள் என்பார். அவர்களும் சிலையின் அடக்கத்தைவிட அதிகமாகவே வைத்துவிட்டு சிலையை எடுத்துச் செல்வார்கள். இப்படியாக ஒரு நாளைக்கு ஒரு சிலை என்று விற்பனையாகும். அதற்குமேல் விற்பனையாகாது. இதில் பாபாவின் லீலை என்னவென்றால், அந்த நாளைக்கு வீட்டிற்கு என்ன

தேவையோ அதற்குண்டான பொருளாதாரம் அந்த சிலையில் கிடைக்கும். அதற்குமேல் கிடைக்காது. எதிர்பார்க்கவும் கூடாது. இப்படியாக எங்களின் ஆன்மீக வாழ்க்கையை ஒழுங்குபடுத்தினார் பகவான் சாயிபாபா.

**<u>லீலை: 7. நெல்லை சீனுவின் கதை.</u>**

திருநெல்வேலியைச் சேர்ந்த சீனிவாசன் என்ற இருபத்தி ஐந்து வயது இளைஞர். சொல்லிக் கொள்வதுபோல் உறவினர்கள் யாருமில்லை. அதிகம் படிக்கவில்லை என்றாலும் தன்னுடைய சொந்த முயற்சியால் ஓட்டுனர் ஆகிவிட்டார்.

இளவயது அல்லவா? நண்பர்களுடன் சேர்ந்து ஜாலியான வாழ்க்கை. எதைப் பற்றியும் கவலையில்லாத மனம். துடிப்பான செயல் என்று இருந்தவருக்கு திடீரென ஒருநாள் இடுப்பிற்கு கீழே செயல் இழந்து போய்விட்டது.

உலகமே நின்றுவிட்டது போலாயிற்று சீனுவிற்கு. தெரிந்த நண்பர்களும், ஒரு சில உறவினர்களும் நெல்லையில் உள்ள அரசு மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்துவிட்டுவிட்டு, காணாமல் போனார்கள். உதவிக்குக்கூட ஆள் இல்லாமல் சீனு ஆறு மாதங்கள் அனாதையாக மருத்துவமனையிலேயே தங்கி வைத்தியம் பார்த்திருக்கின்றார்.

ஆறு மாதங்கள் ஆனதே தவிர உடல்நிலையில் எந்த மாற்றமும் இல்லை. மனம் வெறுத்துப்போய் இருந்தபோதுதான் பக்கத்து படுக்கை நோயாளியை பார்க்க வந்த ஒரு வயதான பெண்மணி, யாருமில்லாமல் சீனு கஷ்டப்படுவதைப் பார்த்து, ஆறுதலாக சற்று நேரம் பேசிவிட்டு, அவர்களின் பையில் இருந்து நமது

"சாயி மகராஜ் குருவை தேடி" ஆன்மீக மாத இதழை எடுத்து அவரிடம் கொடுத்து இந்தப் புத்தகத்தை படி தம்பி சாயிபாபாவிடம் உன் கஷ்டத்தை சொல்லு. பாபா உன்னை குணப்படுத்துவார். என்று கூறிச் சென்றிருக்கின்றார். அவர்யார்? அவரிடம் நமது இதழ் எப்படிச் சென்றது என்ற விபரம் நமக்குத் தெரியாது.

சீனுவும் பொழுதுபோகாதபோது, புத்தகத்தை கொஞ்ச கொஞ்சமாக படித்திருக்கின்றார். இரண்டு மூன்று நாட்களில் ஏதோ ஒன்று அவரை அந்த புத்தகத்திற்குள் இழுத்திருக்கின்றது. நான்காம் நாள் காலையில் அவராகவே என்ன காரணம் என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் என்னிடம் இந்த புத்தகத்தின் வடிவில் நீ வந்திருக்கின்றாய். நீ இருப்பது உண்மையானால் நான் எழுந்து நடக்க வேண்டும். என்று மனதிற்குள் வேண்டியிருக்கின்றார்.

"எவன் ஒருவனது பாவங்கள் விலக்கப்பட்டனவோ அவனே என்னை அறிந்து கொண்டு வழிபடுகின்றான்" என்ற சாயியின் அருள் வாக்கினுக்கிணங்க, அடுத்த நாளில் இருந்து, அடுத்த ஒரு மாதத்திற்குள் சீனு பரிபூரணமாக குணமடைந்து வீட்டிற்கு புறப்பட தயாரான போது நமது குருவை தொலைபேசியில் அழைத்தார் சீனு, குருவிடம் இந்தக் கதையை உணர்ச்சிப் பெருக்குடன் கூறியவர். அய்யா உங்களது புத்தகத்தின் மூலம் சாயிபாபா என்பரை அறிந்து கொண்டு வழிபட ஆரம்பித்தேன். இன்று எனது உடல்

பரிபூரணமாக குணமாகிவிட்டது. நான் இன்று மருத்துவமனையை விட்டு வெளியேறுகின்றேன்.

இங்கிருந்து நான் போகும் முதல் இடமாக பாபா ஆலயம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். எனவே திருநெல்வேலியில் எங்கு பாபா ஆலயம் இருக்கின்றது என்று எனக்கு தெரியாது. உங்களுக்குத் தெரிந்தால் கூறுங்கள் அய்யா என்று கேட்க, அதற்கு குருவோ, எனக்கும் தெரியாது. ஆனால் நீங்கள் மருத்துவமனையை விட்டு வெளியே வந்ததும் எதிர்படு கின்ற முதல் மனிதனிடம் பாபா கோவில் எங்கிருக்கின்றது என்று கேட்டுப்பாருங்கள். அவர் உமக்கு வழிகாட்டுவார் என்று கூறினார்.

அன்று மாலை மணி ஆறு இருக்கும். மீண்டும் சீனுதான் பேசினார். அய்யா நீங்கள் கூறியபடியே எதிர்பட்ட முதல் மனிதனிடம் பாபா கோவில் பற்றி விசாரித்தேன். அதற்கு அவர் நானும் பாபா கோவிலுக்குத்தான் செல்கின்றேன். வாருங்கள் என்று கூடவே கூட்டிச் சென்று தரிசனம் செய்து வைத்தார் அய்யா. இனி என் வாழ்க்கையில் பாபாவை மறக்கவே மாட்டேன் என்று உறுதியளித்தார்.

அதன்பின்பு அவர் வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் குருவிடம் பகிர்ந்து கொள்வார். தற்போது நெல்லையில் பிரபலமான கல்லூரியில் பேரூந்து ஓட்டுனராக இருக்கின்றார். அவர் மனதிற்கு பிடித்தமான பெண்ணையே திருமணம் செய்து கொண்டு, ஒரு ஆண் குழந்தையோடு மகிழ்ச்சியான வாழ்க் கையை வாழ்ந்து வருகின்றார். பாபா தன் பெயர் தாங்கிய புத்தகத்தின் மூலம் கூட தனது லீலையை அரங்கேற்றுவார் என்பதற்கு இந்நிகழ்வு ஒரு சாட்சியல்லவா!

**<u>லீலை: 8 சாய் தியானா லயா உருவான லீலை.</u>**



முதலில் குரு அவர்களால் தியானம் கற்றுக்கொடுக்க ஆரம்பிக்கப்பட்டதே "சாய் தியானாலயா" பிறகு தியானத்துடன் யோகாவும் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார். மையத்தில் ஆறு அடி உயரத்தில் சாயிபாபாவின் புகைப்படம் மட்டுமே இருக்கும். தன்னுடைய சற்குரு என்ற வகையில் அந்தப் புகைப்படத்தை வைத்திருப்பாரே ஒழிய அதற்கென்று பூஜை, பிரசாதம் போன்றவை எதுவும் இருக்காது.




நாட்கள் செல்லச், செல்ல, அங்கு தியானம் கற்றுக் கொள்ள வந்த சகோதரி திருமதி. லதா பாபு அவர்கள் குருவிடம், நான் பாபாவிற்கு பிரசாதம் எடுத்து வரலாமா என்று தயங்கியபடியே கேட்க, குருவும் உங்கள் விருப்பம் என்று கூறிவிட்டார்.

அவரும் வியாழன் தோறும் பிரசாதம் செய்து எடுத்து வந்து பாபாவிற்கு படைத்துவிட்டு மையத்திற்கு வருபவர்களுக்கு வழங்குவார். நாட்கள் செல்லச் செல்ல, மையத்திற்கு வரும் சகோதரி திருமதி சரண்யா ஞானமூர்த்தி அவர்கள், குருவிடம் வியாழன் தோறும் பஜனை செய்து பூஜை செய்து கொள்கின்றோம் என்று கேட்க, அதற்கும் குரு அவர்கள் உங்கள் விருப்பம் என்று கூற,

அடுத்த வாரம் முதல் சகோதரி சரண்யா அவர்கள் பஜனை பாடி பூஜையை தொடங்கினார்கள். குரு அவர்கள் பாபாவைப் பற்றி சத்சங்கம் ஆரம்பித்தார்கள். அதன் பிறகு தியானம், பிரார்த்தனை, அன்னதானம் என்று வளர்ந்து இன்று "சாய் தியானாலயா பிரார்த்தனை மையம்" என்ற பெயரோடு மக்களுக்கு, "அண்டி னோருக்கு அன்னவளமும், வேண்டினோருக்கு ஞானவளமும்" என்ற சிந்தனையோடு ஆன்மீகப் பணியாற்றி வருகின்றது.

ஒரு முறை சகோதரிகளின் விருப் பத்திற்காக குரு அவர்கள் பாபாவிற்கு ஆரத்தி காட்டத் தொடங்கியவர், ஒரு கட்டத்தில் இனிமேல் நான் ஆரத்தி காட்டமாட்டேன். என்று திட்டவட்டமாக கூறிவிட்டார். ஏன் என்ற காரணத்தை என்னிடம் தனியாகக் கூறி வருத்தப்பட்டார்.

மக்களின் மூட நம்பிக்கைகளைப் போக்கி மெய்ஞானத்தை போதிக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். ஆனால் தியான வகுப்பிற்கு மக்கள் வரமாட்டேன் என்கின்றார்கள். பூஜை, புனஸ்காரம் என்றால் கூட்டம் கூட்டமாக வருகின்றார்கள். அவர்கள் விருப்பம் அதுவாக இருந்தால் நாம் அதை தடை செய்ய வேண்டாம். ஆனால் நமது முக்கிய குறிக்கோள் தியானம் மட்டுமே!

ஆகையால் இனி அவர்களே ஆரத்தி செய்து கொள்ளலாம். இனி மேல் நான் ஆரத்தி எடுக்க மாட்டேன் என்று கூறிவிட்டு, மனம் சரியில்லை என்றால் குரு எப்போதும் செல்லும் அவரது தாயாக நினைக்கும் சமயபுரம் சென்று மணிக்கணக்கில் தியானத்தில் ஆழ்ந்து விடுவார்.

அன்றும் அப்படித்தான் நான் சமயபுரம் செல்கின்றேன் என்று கூறிவிட்டு சென்று விட்டார்.

ஆலயத்திற்குச் சென்று தரிசனம் செய்துவிட்டு இரவெல்லாம் தியானம் செய்துவிட்டு அதிகாலையில் நான்கு மணிக்கெல்லாம் புறப்பட்டு, சமயபுரம் பேரூந்து நிறுத்தத்தில்,பேரூந்திற்காக காத்திருக்க, அந்த அதிகாலை நேரத்தில் ஒரு வயதான கிராமத்து பெரியவர் குருவிடம் வந்து தம்பி டீ குடிப்போமா? என்று கேட்க, குருவோ நான் டீ குடிக்கமாட்டேன் என்று கூற, அதற்கு அவரோ, அப்படின்னா எனக்கு வாங்கித்தா என்று கேட்க, குருவும் அவருக்கு டீ வாங்கிக் கொடுக்க, பெரியவர் அந்த டீ யைக் குடிக்காமல் குருவையே வைத்தகண் வாங்காமல் பார்த்திருக்கின்றார்.

குருவோ என்ன பெரியவரே அப்படி பார்க்கறீங்க. டீ யை குடிங்க என்று கூற, பெரியவரோ ஒண்ணுமில்ல தம்பி ஒரு சந்தேகம் உங்ககிட்ட கேக்கலாங்கலா? என்று கேட்க கேளுங்க என்றிருக்கின்றார் குரு.

டீ குடிக்கமாட்டேன்கறது உங்களோட தகுதியா? என்ற பெரியவரைப் பார்த்து ஒரு கணம் திகைத்துவிட்டு, நீங்க என்ன சொல்றீங்கன்னு எனக்குப் புரியல பெரியவரே என்று கூற, பெரியவரோ, இங்கிருந்து மூணு கிலோ மீட்டர் கிழக்கே போனீங்கன்னா, ஒரு பாபா கோவில் வரும்.

அதோட பேரு சீரடி சாயிபாபா தியான பீடம். அங்கே உங்களுக்கு இதற்குண்டான விளக்கம் கிடைக்கும். என்றவர் கையில் இருந்த டீயை ரோட்டில் ஊற்றிவிட்டு, குருவைப் பார்த்துச் சிரித்து, நானும் டீ குடிக்க மாட்டேன் என்று கூறிவிட்டு விடுவிடு வென நடந்து போயிருக்கின்றார்.

குரு, பெரியவர் கூறிய பாபா கோவிலுக்குச் சென்றாரா? அங்கு என்ன நடந்தது என்பதை அடுத்த மாதம் எழுதுகிறேன்.

– *லீலைகள் தொடரும்...*

## ஆரோக்கியம்

நுண் கிருமி பரவல், போர் மயம் என புற சூழல் வேறு இப்போது சரியில்லை. இதில் அக சூழலை வேறு நாம் கெடுத்துக் கொள்வது ஆறறிவு மனிதனுக்கு இருக்கிறது என்பதற்கான உகந்த செயல்முறை அல்ல! ஆம் புற்று நோயை விட ஆன்மாவுக்கு கேடு தருவது பற்று நோய். பற்று எனும் நோய்,அதிக காரம் சாப்பிட்டால் உடலுக்கு ஒவ்வாது.

இன்னொரு காரம் இருக்கிறது அது ஆன்மாவுக்கே ஒவ்வாது. அதுவே அகங்காரம். மற்றொரு காரம் உலகத்திற்கே ஒவ்வாது. அதுவே அதிகாரம்! ஆக பாபா சொல்லும்படி நாம் வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால் தான் "பாபா என்னை காப்பாற்று!" என வேண்டிக் கொள்ளும் தகுதியும் உரிமையும் நமக்கு வருகிறது.

* நம் இஷ்டம் போல் நாம் வாழ்ந்துவிட்டு கேடு வருகையில் இறைவனை பழிப்பது என்பது அறியாமை! கூடுதலான தீய கர்மாவை சேர்த்துக் கொள்கின்றோம். ஆக,பாபா சொல்படி நாம் பரிபக்குவமாக வாழ்ந்து உடல் ஆரோக்கியம், மன ஆரோக்கியம் ,ஆன்ம ஆரோக்கியம் என மூன்று வகை ஆரோக்கியத்தையும் பேணி பாதுகாப்போம்!*

தொடர் –46

# குருவைத் தேடி

வேறு வழி வந்த வேலையை முடிக்க வேண்டும் என்றால், தந்த வேலையை கவனமாய் முடிக்க வேண்டுமே!

அடுத்து வந்த ஒரு மாத காலம் வறுமையின் உச்சத்தை அனுபவிக்க வேண்டியதாக இருந்தது. வந்த வேலை இதுவென்று தெரிந்தமையால் வாழ்க்கையை நகர்த்துவது சற்று எளிதாய் இருந்தது. ஆனால் என்னைப் பார்ப்பவர்கள். எதற்குமே அசையாமல் கல்லுளிமங்கனைப்போல் இருக்கின்றானே என்பார்கள்.

வேறு எங்காவது சென்று வேலை செய்து பிழைத்துக் கொள்ள வேண்டியதுதானே! என்று ஆலோசனை சொல்லாதவர்களே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்னும் ஒரு வருடத்திற்கு நான் இங்கேதான் இருக்க வேண்டும். என் விதி அப்படி என்றால், வெட்டிப் பேச்சு பேசாதே! உனது சோம்பேறித் தனத்திற்கு விளக்கம் வேறா என்பார்கள்.

ஏசு பிரான் சிலுவையில் அறையப் பட்ட போது, "தந்தையே, ஏன் என்னை கை விட்டீர்கள்"! என்ற வார்த்தையின் அழுத்தத்தை இப்போது என்னால் மிக நன்றாக உணர்ந்து கொள்ள முடிந்தது.இதைப்போன்ற அனுபவங்கள் மனிதனுக்கு ஏற்படவில்லை என்றால் வார்த்தைகள் என்பது வெறும் எழுத்துக்களே! அனுபவங்களே வார்த்தைகளை வீரியம் மிகுந்த



விதைகளாக்குகின்றன.

எனவே இந்த அனுபவங்கள் நமக்கு தேவைதான் என்று என்னோடு என் மனைவியும் ஏற்றுக்கொண்டார்கள். நான் அவர்களை மனைவியாக ஏற்றுக்கொண்டதில் இரண்டு விசயங்களில் பெருமைப்படுகிறேன். ஒன்று, அவர்களுக்கும் என்னைப்போல் பொன் பொருளின் மீது ஆசையில்லை என்பதற்காக. இரண்டு, ஆன்ம தேடுதலில் என்னுடன் இணைந்து கொண்டமைக்காக.

சில நேரங்களில் ஏன் இவர்களையும் நம் வாழ்க்கையில் இணைத்துக் கொண்டு சிரமப்படுத்துகின்றோம் என்று தோன்றும். ஆனால்

*"காரணமில்லாமல் காரியமில்லை" என்பதை உணர்ந்து நடப்பதை அப்படியே ஏற்றுக்கொள்வோம் என்று உடனே சமாதானமாகிவிடுவேன்.*

*எங்களுக்கு எப்போது பசிக்குமோ அப்போதெல்லாம் தியானம் செய்வோம்! எப்போதெல்லாம் பிணக்குகள் ஏற்படுமோ அப்போதும் தியானம் செய்வோம்! எப்போதெல்லாம் மனிதர்களின் தாக்கங்கள் அதிகரிக்குமோ, அப்போதெல்லாம் தியானிப்போம்!*

*அடுத்து வந்த ஒருவருட காலத்தை தியானத்தை வைத்தே தள்ளினோம்.*

*சரியாக ஒரு வருடம் முடிந்த உடன் அங்கிருந்து புறப்பட்டு கும்பகோணம் வந்தடைந்தோம். இல்லற இன்ப துன்பங்களை நாங்கள் முழுமையாக அனுபவிக்கும் பொருட்டு அடுத்து வந்த இரண்டு ஆண்டுகள் என் வாழ்வில் சொல்லிக்கொள்ளும் அளவிற்கு ஆன்மீக சம்பவங்கள் அரங்கேறவில்லை.*

*ஆயினும், நானும் என் மனைவியும் தொடர்ந்து அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் மனவளக்கலை மன்றத்தின் பயிற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தோம். அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் ஆசீர்வாதத்தால் நாங்கள் திருமணம் முடித்திருந்தாலும், உறவுகள் யாரும் எங்களுடன் இல்லை. நானும் என் மனைவியும் மட்டும் தனியாக இருந்தோம்.*



*ஆயினும் அருட்தந்தை எப்போதும் எங்கள் கூடவே இருந்து எங்களை வழிநடத்தி வந்ததை நாங்கள் இருவரும் மனப்பூர்வமாக உணர்ந்தோம். எங்களுக்கு குரு, தாய் தந்தை எல்லாம் அவரே என்ற நிலையில் வாழ்ந்திருந்தோம். எது ஒன்று என்றாலும் அவரிடமே முறையிடுவோம். எங்களுக்கு எல்லாமுமாக எங்கள் குரு ஒருவரே இருந்தார். குரு எங்களுடன் இருந்ததால் மற்றவருடைய துணை எங்களுக்கு தேவையில்லாமல் இருந்தது.*

*அக்கால கட்டத்தில் வாழ்க்கையை ஓட்டுவதற்காக ஒரு பெட்டிக்கடை வைத்திருந்தேன். காலை ஆறு மணியில் இருந்து, இரவு பத்து மணிவரை பெட்டிக்கடையில் ஒரு நாளைக்கு நூறு ரூபாய் வியாபாரம் நடக்கும். என்பது ரூபாய்க்கு கடைக்கு பொருட்கள் வாங்கியது போக இருபது ரூபாய் எங்களுக்குப் போதுமானதாக இருந்தது. ஆனால் தினமும் நூறு ரூபாய்க்கு வியாபாரம் நடக்காது. அந்த நாளில் மனம் மிகவும் வேதனைப்படும்.*

*போகப்போக வியாபாரம் மந்தமாகிப்போனது. தினமும் பத்து ரூபாய் கிடைப்பதே சிரமமாக இருந்தது. அன்று என் பிறந்தநாள் வேறு, என் மனைவிக்கு ஒரு முழம் பூ கூட வாங்கிக் கொடுக்க முடியாத சூழ்நிலை. என் மனம் சங்கடப்பட்டால் நான் மவுன விரதம் இருப்பது வழக்கம். நான் என் மனைவியிடம் என் பிறந்த நாளுக்காக மவுன விரதம் இருக்க போகிறேன் என்று கூறிவிட்டு மவுன விரதம் தொடங்கினேன்.*

*மவுனம் மூன்றாம்*




நாளாய் தொடர்ந்தது. நான்காம் நாள் காலையில் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் சமாதியானார் என்ற செய்தி என்னை நிலைகுலையச் செய்தது.

அருட்தந்தையின் உடல் ஆழியாறு அறிவுத்திருக்கோவிலில் பக்தர்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இருக்கின்றது. மூன்றாம் நாள் சமாதி வைக்கப்படுகிறது என்ற செய்தியை அறிந்து கொள்கிறேன். அந்த விநாடியில் இருந்து ஆழியாறு செல்ல முயற்சித்துக் கொண்டே மவுன விரதத்தை தொடர்கிறேன்.

அந்தநாளில் செல்போன் இல்லாத தினால் நியூஸ் பேப்பர்களின் மூலமே செய்திகளை அறிந்து கொள் வோம். ஆகையால் நான் என் மனைவியிடம் அருட்தந்தை அவர்கள் மறைந்ததை கூறவில்லை.

மூன்றாம் நாள் வரை என்னால் நூறு ரூபாய் புரட்ட முடியவில்லைநூறு ரூபாய் இல்லாததினால் என்னால் என் குருவை கடைசி நிமிடத்தில் தரிசிக்க இயலவில்லை என்பதை சீரணிக் கவே முடியவில்லை. மவுனமாக வீட்டிற்கு வந்தவன் வீட்டில் இருக்கும் அருட்தந்தையின் புகைப்படத்திற்கு முன் தீபம் ஏற்றிவைத்துவிட்டு மவுனமாக நிற்கிறேன்.

இக்காட்சியை கண்ட என் மனைவி பதறியபடி வந்து ஏன் உயிரோடு இருப்பவருக்கு விளக்கு ஏற்றி வைத்திருக்கின்றீர்கள். என்று கேட்டதுதான் தாமதம். மூறு நாட்களாய் மவுன விரதம் என்று அடக்கி வைக்கப்பட்டிருந்த துன்பம் பீறிட்டு அழுகையாக வெளிவந்தது.

அழுகையினுடே மகரிஷி நம்மை விட்டுப் போய்விட்டார் என்ற தகவலை என் மனைவியிடம் கூற அவரும் அழத் தொடங்கிவிட்டார். எங்களுக்கு எல்லாமுமாக இருந்த எங்கள் குரு எங்களை விட்டு மறைந்துவிட்டார் என்றதும் உண்மையிலேயே நாங்கள் யாருமில்லாத அநாதைகளாக உணர்ந்தோம்.

மகான்கள் தங்களது உடலைத்தான் விடுகின்றார்கள். உயிரை அல்ல என்பதை நாங்கள் படித்தும், கேட்டும் இருக்கின்றோம். உணர்ந்தது இல்லை. ஆனால் அதை நாங்கள் நேரில் அனுபவிக்கும் ஒரு சந்தர்ப்பத்தை எங்களுக்கு இறைவன் அருளினான்.

அடுத்து வந்த ஒரு மாத காலம் அருட்தந்தையின் மறைவு எங்களை வாட்டியது. வாழ்க்கையில் இனி என்ன செய்யப்போகின்றோம் என்ற விரக்தி ஏற்பட்டது. ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளுவது கூட குறைந்து போயிற்று. எதற்கு வாழ்கின்றோம் என்ற நிலையில் காலம் போய்கொண்டிருந்தது.

அன்று காலை ஐந்து மணிக் கெல்லாம் கடை திறப்பதற்காக சாவியை எடுத்துக் கொண்டு மனைவியிடம் கூட சொல்லிக்கொள்ளாமல் கடைக்கு வந்தேன். கடையை கூட்டி பெருக்கி எடுத்து வைத்து விட்டு, கல்லா பெட்டியில் அமர்ந்து நிமிர்ந்து பார்க்கின்றேன். வாசலில் நின்று ஒரு பிச்சைக்காரர் என்னையே பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

பிச்சைக்காரருக்கு எழுபது வயதிருக்கும். வழுக்கை தலையும், நீண்ட தாடியும், இடுக்கு விழுந்த கண்களும், கறைபடிந்த பற்களுடனும் இடுப்பில் ஒரு கிழிந்த அழுக்கு வேட்டியுடன் என்னை நோக்கி கைகளை நீட்டிக்கொண்டு நிற்கின்றார்.

காலையில் வியாபாரம் கூட ஆக வில்லை. அதற்குள் பிச்சைகாரர் வந்து விட்டார். அவருக்கு என்ன தருவது என்று அழுத்துக் கொண்டே பையில் இருந்த ஒரு ரூபாய் நாணயத்தை அவரின் கைகளில் வைத்தேன். அவர் என்னையும் காசையும் திருப்பி திருப்பி பார்க்கின்றார். பிறகு நான் எதிர்பாராத வகையில் காசை என் முகத்திற்கு நேரே வீசி எறிந்து விட்டார்.

எனக்குள் எழுந்த கோபத்தை அடக்கிக்கொண்டு கீழே குனிந்து அந்த காசை எடுத்துக் கொண்டு நிமிர்ந்து பார்க்கின்றேன். அதே பிச்சைக்காரர் நெற்றி நிறைய விபூதி பூசிக்கொண்டு பளிச்சென்ற ஜிப்பா வேஷ்டியுடன் பழுத்த பழமாக முகம் ஒளி வீச நின்று கொண்டிருக்கின்றார். நான் கீழே குனிந்து நிமிர்வதற்குள் காட்சி மாறிவிட்டதை அறிந்த நான் வந்திருப்பது யாரோ சித்த பெருமான் என்பதை அறிந்தவுடன் என்னையறியாமல் அவரை வணங்க கைகளை கூப்புகிறேன். அவர் மீண்டும் என்னைப் பார்த்து கைகளை நீட்ட, இப்போது என்ன கொடுப்பது என்று குழம்புகிறேன்.

காசு கொடுத்தால் வீசி எறிகிறார். வேறு என்ன கொடுப்பது என்று யோசித்தவாறு இரண்டு பிஸ்கெட்டை எடுத்து அவரிடம் நீட்டினேன். பிஸ்கெட்டை வாங்கியவர் மீண்டும் என்னை நோக்கி எறிந்தார். ஆனால் என்னை நோக்கி பிஸ்கெட்டுகள் வரவில்லை. அதற்குபதில் சில்லரை காசுகள் என் மீது பட்டு கடை எங்கும் தெறித்து விழுந்தன.

நான் உடனே குனிந்து ஒரு நாணயத்தை மட்டும் எடுத்துக் கொண்டு நிமிர்கின்றேன் அவரை காணோம். கடையில் இருந்து வெளியே வந்து பார்க்கிறேன் அந்த காலை வேளையில் தெருவில் யாரையும் காணோம். மீண்டும் கடைக்குள் சென்று சிதறிய



நாணயங்களை சேகரித்தேன். மொத்தம் ஒன்பது ஒரு ரூபாய் நாணயங்கள் இருந்தன. நாணயங்களை பேப்பரில் மடித்து கல்லாப்பெட்டியில் வைத்தேன். அன்று இரவிற்குள் வியாபாரம் படு ஜோராக நடந்து கல்லாப்பெட்டி நிறைந்து வழிந்தது. அன்றைய வியாபாரம் ஐந்நூரு ரூபாய்க்கு மேல் நடந்தது.

யார் என்று தெரியாத சித்த புருசனை மனதிற்குள் வணங்கினேன். அன்றிலிருந்து. நூறு ரூபாய்கு ஓடிய வியாபாரம் முன்னூறு, நானூறு என்று அதிகரித்தது. இருந்தாலும் அவரை மீண்டும் மீண்டும் காணவேண்டும் என்ற ஆவல் அதிகரித்தது. நான் எப்போதெல்லாம் அவரை நினைத்து அதிகமாக ஏங்குகிறேனோ, அன்று கடைவாசலுக்கு வந்து நிற்பார். ஒரு சில விநாடிகள் தான். எங்கு தேடினாலும் கண்ணில் பட மாட்டார்.

நான் இதை என் மனைவியிடம் கூற, அவரும் மகானை பார்க்க ஆசைப்படுகின்றார். நான் என் மனதிற்குள்ளாக அவரிடம் என் மனைவிக்கும் காட்சியளிக்கும்படி பிரார்த்திக்கின்றேன்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை. அன்று கடை இல்லை எனவே நானும் என் மனைவியும் காலை ஆறு மணிக்கெல்லாம் எழுந்து தியானம் செய்து விட்டு நாங்கள் குடியிருக்கும் வீட்டின் பால்கனியில் நான் நின்று கொண்டிருக்கின்றேன். என் மனைவி தேனீர் தயாரித்துக் கொண்டிருக்கிறார்

எதேச்சையாய் வீட்டின் பால்கனியில் இருந்து கீழே பார்க்க, கடைக்கு வந்த சித்த புருசர் என் வீட்டின் கீழே நின்று என்னைப் பார்க்கின்றார். நான் என் மனைவியை கூப்பிட்டுக் கொண்டே உள்ளே ஓடி அவரை இழுத்துக் கொண்டு பால்கனிக்கு வந்து கீழே காட்டுகின்றேன்.

என் மனைவியும் நானும் கீழே பார்க்கும் போது அவர் எங்கள் தெருவின் கடைசியில் எங்களுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு நடந்து போய்க் கொண்டிருக்கின்றார். மகானின் முகத்தைப் பார்க்க முடியவில்லையே என்று என் மனைவிக்கு வருத்தமாக போயிற்று.

உடனே கீழே வந்து சைக்கிளை எடுத்துக் கொண்டு விரைகின்றோம். எங்கு தேடியும் அவரைக் காணவில்லை.

அடுத்த ஒரு மணிநேரம் இதைப் பற்றியே பேசிக்கொண்டிருந்த நாங்கள் இருவரும் ஒரே முடிவிற்கு வந்தோம். வீட்டில் இருந்து யோசித்துக் கொண்டே இருப்பதைவிட நாம் புறப்பட்டு கொட்டையூர் ஆஸ்ரமத்திற்குச் சென்று குரு இராமா சாதுவின் சமாதியை வணங்கி வருவோம் என்று தீர்மானித்து உடனே புறப்பட்டோம்.

என்னுடைய பதினாறு வயதில் எனக்கு தீட்சை அருளிய "காவிரிக்கரையில் ஓர் பரமஹம்சர்" திரு. இராமா சாது அவர்களின் சமாதிக்குப் பின் ஐந்து ஆண்டுகளாக நான் ஆஸ்ரமத்திற்குச் செல்லவில்லை. ஆஸ்ரமத்தின் தலைவர் அண்ணா இராமதாஸ் அவர்கள் என்பது மட்டும்தான் எனக்குத் தெரியும். ஆனால் நான் அவரைப் பார்த்து பழகும் வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை.

நாங்கள் ஆஸ்ரமத்தை நோக்கிச் சென்றோம் அந்த நாள் எங்களுக்கு இனிய நாளாய் இருக்கப்போகின்றது என்பதோ, எங்களுக்கு ஆஸ்ரமத்தில் ஓர் ஆச்சர்யம் காதிருக்கின்றது என்பதோ

- (தொடரும்...)

# "ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

மிகவும் கடுமையான கலியின் களியாட்டத்தில் பலவிதமான இயற்கை சீற்றங் களினால் அல்லல்படும் நம் அனைவருக்கும் கலியுகத் தின் முதல் தத்த அவதாரியும் ஸ்ரீ ஷீரடி சாயிபாபா உருவில் என்றென்றும் நம்மை காத்து அருள்புரியும் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் அருளிச்செய்த இந்த மாமந்திரத்தை அனுதினமும் ஜபம் செய்து முழுமையான பாதுகாப்பு வளையத்தில் நாம் திகழ்ந்திட...



## "திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ர தத்தாத்ரேயா திகம்பரா"!

– என்ற நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மந்திரத்தை ஜபம் செய்ய வேண்டுகிறோம்.

இம்மந்திரத்தை தினமும் 108 முறை ஜபம் செய்ய வாய்வு மண்டலத்தில் உள்ள எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து நம் அனைவருக்கும் பாதுகாப்பு கிட்டும் என்பது அனுபவப்பூர்வமான உண்மை.

## "ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; சுந்தர்சாய், 9789404451

தொடர் –10

சாய் சரவணன்

# "அதி தேவதை"

மெய்யுணர்வு என்பது ஞான விழிப்பு ஆகும். இந்த ஞான விழிப்பு ஆண், பெண் என்ற பேதம் இல்லாது ஏற்படும். ஞான விழிப்பு பிற்றவர்கள், நான் யார்? எதற்காக வந்தோம்? எங்கே போகிறோம்? இங்கு என்ன செய்கிறோம்? நம் லட்சியம் என்ன? எனும் கேள்விகளுக்கு விடைகாண முயற்சிப்பர்.

அப்படி முயற்சித்து தன்னுடைய நிலை என்ன என்பதை அறிந்து கொண்ட ஞானிகளை நம் போன்ற அஞ்ஞானிகள் காண நேர்ந்தால், அறியாமையால் அவர் களை நாம் பைத்தியம் என்று நினைத்து விலகிச்செல்வோம்.

காரணம் அவர்களது நடை, உடை, பாவனை யாவும் நம்மிலிருந்து வேறுபாடக காணப்படும். பக்குவம் அடைந்த ஆன்மீக சாதகனே அத்தகைய உயர்ந்த ஞானியை அடையாளம் கண்டுகொண்டு தன் ஆன்ம முன்றேற்றத்திற்காக சரணடைவான்.

நம்போன்ற அஞ்ஞானிகள் அவர்களைப் பார்க்க நேர்ந்தால் முதலில் நம்மை ஆட்கொள்வது சந்தேகம் தானே! எதுவும் எளிதாக நமக்குக் கிடைப்பதில்லை. அப் படியே அந்த பாக்யம் நமக்குக் கிடைத்தால் பயன்படுத்திக்கொண்டு நலன்பெறுவதே நன்மை பயக்கும். ஆகவே இறைவனின் சங்கல்பமே அனைத்தும் என்றாலும், ஞானிகளே நம்மை சரியான பாதையில் இட்டுச் செல்வர் என்பது உண்மையாகும்

ஒருவழியாக சுந்தராபாய், ஆலந்திக்கு வந்து சேர்ந்தாள். அவள் ஏற்கனவே ஞானத்தேவரின் பெருமைகளை நன்கு உணர்ந்தவளாக இருப்பதால், அவள் மனம் ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தது. பண்டரியில் எப்படி விட்டலை தரிசிப்பதில் சில வழிமுறைகள் இருக்கின்றனவோ, அதுபோலவே ஞானத்தேவரையும் தரிசிக்க சில வழிமுறைகள் உண்டு.

அதன்படி சுந்தராபாயி ஆலந்தியில் ஓடும் இந்திராணி நதியில் குளித்து ஹரி நாமத்தை பாடியபடி, ஸ்வர்ணபிம்பிள் என்று கூறும் அரசமரத்தை வலம்வந்து பிரார்த்தனை செய்தாள்.ஞானத்தேவரால் ஊன்றப்பட்ட காய்ந்த கம்பு ஒன்று பிற்காலத்தில் புனித அரச மரமாக வளர்ந்து நின்றது .

ஞானத்தேவரின் ஆணைக்கிணங்க ஏகநாதர் ஆலந்தியில் ஞானேஸ்வரி எனும் நூலைஎழுதினார். அங்கு அவரின் பாதம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. அங்கு சென்ற சுந்தராபாயி தன் மானசீக குருவின் பாதுகைகளை வணங்கினாள்.

700 வருடங்களுக்குப் பின்பு இன்றும் 21 வயது பாலகனாகவே இருக்கும் ஞானத்தேவரின் சமாதியில் தன்னையே மறந்தவளாய், ஞானத்தேவரை கண்ணாரக் கண்டு தரிசனம் செய்தாள் சுந்தராபாயி.

பின்பு கண்ணீர்மல்க,ஹே! ஞானத் தேவா, நீங்கள் பாண்டுரங்கனின் அவ தாரமாக இருந்தாலும் பக்தர்களிடம் ஒரு நண்பனாகவே பழகி அனைவரின்

மனதையும் ஆட்கொள்கின்றீர்கள். என்னை தாங்கள் அழைத்ததால் நான் ஓடி வந்தேன். என் தேடுதலை நீங்கள் அறிவீர்கள். வழிகாட்டி அருள்புரியுங்கள் ஞானத்தேவரே! விரைவில் என் சற்குருவை நான் காண வேண்டும் என்று பிரார்த்தித்தாள்.

பின்பு தங்களின் தரிசனம் கிட்டும்வரை நான் இங்கேயே இருப்பேன் என்று விரதம் பூண்டு, நியம நிஷ்டையுடன்,சதா பகவானின் திருநாமத்தை மனதினில் உச்சரித்தவண்ணம் ஆலந்தியிலேயே தங்கிவிட்டாள்.

ஞானத்தேவரின் அருளை நாடி ஆலந்தியிலேயே தங்கி உபவாசம் இருப் போருக்கு கனவின்மூலம் அனுக்கிரகம் செய்யும் வழக்கம் அங்கு உண்டு. ஆகையால் சுந்தராபாயும், ஞானத்தேவரின் தரிசனத்தை நாடி ஸ்வர்ணபிம்பிள் என்று கூறப்படும் அரசமரத்தடியில் ஏழு நாட்கள் நியம நிஷ்டையுடன் அமர்ந்திருந்தாள்.


எட்டாம்நாள் ஏகாதசி திதி, அதி காலையில் சுந்தராபாயின் தியானத் தில் ஞானத்தேவர் தரிசனம் தந்தார். அக்கணமே பக்தி பாவத்தில் ஞானத்தேவரை வணங்கிப் பாடி மகிழ்ந்தாள்.கண்களில் கண்ணீர் மல்க என்னை ஆதரிக்க வந்த பரமகுருநாதா! அருள்புரிவாய் என மனதால் வேண்டினாள்.

ஒரு கணம் என்னை உய்விக்க வந்த சற்குருநாதர் இவர்தானோ என்றுகூட எண்ணினாள். அவளின் மன ஓட்டத்தைப் புரிந்து கொண்ட ஞானத்தேவர் அவளிடம் பேசினார். சுந்தராபாய் நீ நினைப்பது போல் நான் உன் சற்குரு அல்ல. நான உன் சற்குருவை அடையாளம் காட்டவே வந்தேன். நீ பெரும் பாக்யம் பெற்றவள். உன்னை காண்பதற்கு நானும் கூட பாக்யம் செய்திருக்கிறேன். நீ குரு பக்திக்காகவே உதித்தவள் என்றார்.

உடனே சுந்தராபாயி, அப்படியானால் என் சற்குருவை எப்போது காண்பேன், எப்படிக்கண்டு கொள்வேன். என ஏக்கத்தோடு வினவினாள்.

ஞானத்தேவரோ,நீ உன் சமர்த்த சற்கு ருவை விரைவில் காண்பாய். எனினும் நீ பாரத தேசம் முழுவதும் யாத்திரை செய்து, வாழ்ந்த ஞானிகளின் சமாதிகளையும், வாழ்ந்து கொண்டிருக்கும் மகான்களையும் சந்தித்து தரிசனம் செய்வாயாக! அவ்விதம் நீ தரிசிக்கும் போது, எந்த மகான் பகவான் விட்டலனாக உனக்கு தரிசனம் தருகின்றாரோ அவரே உனது சற்குரு ஆவார் எனக்கூறி சுந்தராபாயை ஆசீர்வதித்து மறைந்தார்.

சுந்தராபாய் தன் தியானத்தை முடித்துக் கொண்டு ஞானத்தேவரின் ஆணையின்படி பாரத தேசம் முழுவதும் யாத்திரை சென்று எப்படியாவது என் குருநாதனை கண்டு தரிசிப்பேன் என்ற தாபம் கொண்டு, எழுந்து இந்திராணி நதியில் குளித்து ஞானத்தேவரின் சமாதிக்குச் சென்று



வணங்கி விடைபெற்றாள்.

அங்கிருந்து புறப்பட்டு பாண்டுரங்கனின் லீலையை எண்ணித் துதித்தவாறு "துகாராம் சுவாமி" வாழ்ந்த தேஹூ என்ற புனிதமான இடத்திற்கு வந்து சேர்ந்தாள். அப்போது குளிர்காலம் வேறு. எனவே சுந்தராபாயின் உடல் குளிரால் நடுங்கியது. வேறு வழியில்லாமல் அன்றிரவு ஆலயத்தில் தங்கிவிட்டாள்.

குளிரால் நடுங்கிய சுந்தராபாயிக்கு விட்டலன் தனக்கு ஆலயத்தில் போர்த்தி யிருந்த போர்வையை அவளுக்கு போர்த் திவிட்டு மறைந்தான். அதிகாலை எழுந்ததும் போர்வை தன் மீது இருப்பதை கண்டாள் சுந்தராபாய். உடனே அனைத் தையும் அறிந்து கொண்டாள். ஓ! பிரபு விட்டலா இது உன் வேலைதானே! நான் நன்கு அறிவேன். நீ என்றும் எனக்கு வழித்துணையாக வருகிறாய் என்பதை நான் நன்கு அறிவேன். என்று அகமகிழ்ந்து அந்தப் போர்வையை சுருட்டி தன்னுடன் எடுத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டாள்.

சுந்தராபாயின் ஞானத்தேடுதலில், பல எண்ணற்ற அனுபவங்களும், தெய்வீக காட்சிகளும் கிடைக்கப்பெற்றன. அந்த வகையில் சுந்தராபாய் அடுத்ததாக பிருந்தா வனத்திற்கு செல்ல முடிவெடுத்தாள். வாகன வசதிகள், போக்குவரத்து, சாலைகள் போன்ற எந்தவித வசதியும் இல்லாத அந்தக் கடினமான காலகட்டத்தில் சுந்தராபாய் இரவு, பகல் பாராது, உண வின்றி அலைந்து திரிந்து ஒரு வழியாக பிருந்தாவனத்திற்கு வந்து சேர்ந்தாள்.

கண்ணபிரானின் லீலைகளை மனதிற் குள் நினைந்து கொண்டு, ஆடிப்பாடி மகிழ்ந்தாள். எந்த சாதுவைப் பார்த்தாலும் தன் சற்குரு இவராக இருப்பாரோ என மனம் சஞ்சலமடைவாள். மகான்களின் சமாதியில் மணிக்கணக்காக தியானம் செய்வாள். யமுனா நதியில் நீராடி, மீராபாயின் ஆசிரமம் சென்று, மீராவின் பாடல்களைப் பாடிக்கொண்டு சிலநாட்கள் பிருந்தாவனத்திலேயே கழித்தாள்.

சற்குருவைக் காண ஏக்கம் அதிகரித்த தால், காசிக்குச் செல்வதென புறப்பட்டாள். இடையில் ஒரு புண்ணிய தலத்தையும், மகான்களது சமாதியையும் விடாது தரி சித்துக் கொண்டே காசி வந்து சேர்ந்தாள்.

கங்கா மாதாவை தரிசனம் செய்து, காசி விஸ்வநாதர், விசாலாட்சி, அண்ணபூரணி, ஆகியோரை தரிசித்து கபீர்தாசர், தன் மானசீக குரு ஏகநாதர் திரைலிங்க சுவாமி, ஆகியோர் வசித்த இடங்களை சென்று தரிசித்து, காசியிலாவது என் சற்குருவை காண்பேனா என்ற தாபத்தால் பலநாட்களாய் காசியையே சுற்றி, சுற்றி வந்து சித்தயோகியாய் மாறினாள்.

இத்தனை வருடங்கள் கடந்தும் என் சற்குருவை காணவில்லையே. நான் என்ன பாவம் செய்தேனோ என்று புலம்பியபடி, விட்டலனின் வாக்கை நினைத்துப் பார்த்தாள். நானே உன் சற்குருவாய் வருவேன். என்ற வாக்கு எப்படி நிறைவேறாமல் போகும். என்றவாறே தன் மனதை தேற்றிக்கொண்டு, நாம் மீண்டும் பண்டரிபுரத்திற்கே செல்வோம் என்று முடிவெடுத்து யாத்திரையாக பண்டரிபுரத்திற்கே வந்து சேர்ந்தாள்.

பண்டரிபுரத்தில் எங்கிருந்து புறப்பட் டாளோ, அதே சந்திரபாகா நதிக்கரைக்கே வந்து குளித்து முடித்து புண்டரீகன் சமாதிக்கு அருகில் கண்களை மூடியவாறு கிருஷ்ணன் விக்கிரகத்தை மார்போடு அணைத்துக் கொண்டு, காண்போருக்கு ஓர் சித்த யோகியாய் தென்பட்டாள் நம் சுந்தராபாய்.

- (தொடரும்...)

ஓம் சாய்ராம்

# "வாழ்வை வளமாக்கும் சாயி லிகித ஜபம்"

சாய் அன்பர்களே,



முயற்சி திருவினையாக்கும் என்பது வள்ளுவம். வாருங்கள் நாமும் இந்த லிகித நாம ஜெபத்தை ஊக்கத்துடன் முயன்று செயல்பாட்டில் ஆக்கம் காண்போம். சத்குரு சாய் மஹராஜ் திருவருளால் நம் வாழ்வில் மன அமைதியோடு கூடிய வெற்றியைக் காண்போம்.

**நமது லிகித நாம ஜபம்**
**"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்"**

நம் எல்லோருடைய இல்லங்களிலும், உள்ளங்களிலும் ஒளி ஒலி வீசட்டும். இதுவரை (30.11.20) நாட்களாக தினமும் 108 முறை எழுதிவரும் நம் சாய் அன்பர்களுடன் இணைந்து சாய் மஹராஜ் திருவருள் பரிபூரணமாக நம்மை வழிநடத்த ப்ரார்த்திப்போம்.

**'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'**


தொடர்புக்கு;
சுந்தர்சாய், செல்: 9789404451

# சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்

இம்மாத சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் அரக்கோணம் ஸ்ரீ அருளானந்த அருணாச்சல சித்தர் சுவாமிகளின் தரிசனம் காண்போம் வாருங்கள்..!



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

## ஸ்ரீ அருளானந்த அருணாச்சல சித்தர்

இம்மாத சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் அரக்கோணம் ஸ்ரீ அருளா னந்த அருணாச்சல சித்தர் சுவாமிகளின் தரிசனம் காண்போம் வாருங்கள்.

அரக்கோணம் நரசிங்கபுரத்தில் வாழந்து வந்த தெய்வீக தம்பதிகள் திரு.முனியப்பன் மங்கத்தாயம்மாள் ஆகியோருக்கு வெகுநாட்களாய் குழந்தைச் செல்வம் இல்லாமல் இருந்தது.



தம்பதிகள் இருவரும் போகாத கோவில் இல்லை, செய்யாத பரிகாரமும் இல்லை. இருப்பினும் குழந்தைச் செல்வம் கிட்டவில்லை. வெறுத்துப் போய் எங்கும் சுற்றாமல் வீட்டிலேயே தம்பதிகள் இருவரும் இறைவனை நோக்கி கடும் விரதம் மேற்கொண்டனர்.

ஒருநாள் இரவு அவர்கள்

வீட்டிற்கு சிவனடியார் ஒருவர் வந்து யாசிக்க அவருக்கு உணவளித்த தம்பதியினர் தங்கள் குறைகளை அவரிடம் கூறினர். உடனே சிவனடியார் கவலைப்படவேண்டாம். விரைவில் உங்களுக்கு ஆண் மகவு ஒன்று பிறக்கும். அவன் சாதாரண மனிதன் இல்லை பார் போற்றும் ஞான குருவாகத் திகழ்வான் என்று ஆசியளித்துச் சென்றார்.

சிவனடியாரின் வாக்கு பலித்தது. 20.11.1877அன்று தம்பதிகளுக்கு அழகிய ஆண் மகவு ஒன்று பிறந்தது. குழந்தை வளர, வளர, முகத்தில் தெய்வீக ஒளி வீசியது.

அருளானந்தன் என்று பெயரிடப்பெற்ற நம் சுவாமிகள் வளர்ந்ததும் நாகலாபுரம் இராமகிரி மலையில் தவம் புரிந்து வந்த சற்குரு ஸ்ரீ மத் சிதானந்த சுவாமிகளிடம் உபதேசம் பெற்று ஆன்மீக சாதனையில் ஈடுபட்டார்.



உரிய வயதில், கன்னியம்மாள் என்ற மங்கையை திருமணம் செய்து கொண்டு நான்கு பெண் குழந்தைகளுக்கும், இரண்டு ஆண் குழந்தைகளுக்கும் தந்தையானார்.

சுவாமிகள் வாழும் காலத் தில் இவரது சீடர்கள் மூன்று மாதத்திற்கு ஒருமுறை 108 பொருட்களால் அபிசேகம் செய்து வணங்கி மகிழ்வார்கள். அபிசேகம் செய்யும் காலத்தில் சுவாமிகளின் உடல் கல்லைப் போல் மாறிவிடும். அபிசேகம் முடிந்த உடன் மீண்டும் மனித உடல் போல் மாறிவிடும்.

இதை சோதிக்க நினைத்த ஒரு நாத்திகர் அபிசேக நேரத் தில் சுவாமிகளின் உடலை ஊசியை கொண்டு குத்தினார். சுவாமிகளின் உடல் கல்லாய் மாறியிருந்ததனால் ஊசி உடைந்து போயிற்று. உண் மையை தெரிந்து கொண்ட நாத்திகர் சுவாமிகளின் மகி மையை உணர்ந்து அவரிடம் மன்னிப்பு கேட்டு அவரிடமே சீடனாகச் சேர்ந்தார்.

மற்றொரு நாத்திகர் சுவாமிகளுக்கு அபிசேகம் செய்யும் போது சூடான எண்ணையை சித்தர் மேல் ஊற்ற சித்தருக்கு எதுவும் ஆகவில்லை. ஆனால் எண்ணையை ஊற்றியவரின் உடல் முழுவதும் தீப்புண்கள் ஏற்பட்டு வலியால் கதறி துடித்தார்.

சுவாமிகளிடம் சென்று தான் செய்த தவறை மன்னித்து அருளும்படி வேண்ட சுவாமிகளும் மனமிறங்கி அவரை மன்னித்து அருளினார்கள்.




சுவாமிகள் தான் வாழும் காலத்தில் 25 க்கும் மேற்பட்ட சீடர்களுக்கு குரு உபதேசம் செய்வித்து அற்புதமான சீடர்களை உருவாக்கினார். அவர்களில் செங்கல்பட்டு மயானத்தில் சீவசமாதி கொண்டுள்ள ஸ்ரீ அருணாச்சலம் சுவாமிகள் குறிப்பிடத்தக்கவர்.

மற்றொரு சீடர் சித்தூர் மாவட்டம் பண்டபள்ளியை சேர்ந்த டி. கோவிந்தசாமி என்பவர் மாந்தோப்பில் காவல் பணி செய்து வந்தார். ஒருமுறை மாந்தோப்பில் திருடவந்த திருடர்கள், சீடரின் மீது கற்களால் தாக்கினார்கள். அவர்களிடம் இருந்து தப்பிக்க சீடர் அருகில் இருந்த புதருக்குள் மறைய அங்கு ஒரு நல்ல பாம்பு இவர் முன் படம் எடுத்து ஆடியது.

சீடர் சற்றும் பயப்படாமல் தன் குருநாதரை வேண்ட, நாகம் இவரை ஒன்றும் செய்யாது திருடர்களை நோக்கிப் பாய்ந்தது. அதைக்கண்ட திருடர்கள் பயந்துபோய் ஓடி ஒளிந்தனர். சீடர் தன் குருவின் பெருமையை எண்ணி பணிந்து வணங்கினார்.

மற்றொரு ஆத்ம சீடரான ஸ்ரீ கோவிந்தன் என்பவர் கூத்தலம்பட்டு என்ற ஊருக்கு சென்றுவிட்டு நள்ளிரவு நேரத்தில் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது தீய ஆவி ஒன்று இவரை பின் தொடர்ந்து வர, அதை அறிந்து கொண்ட சீடர் தன் குருவான ஸ்ரீ அருளானந்தரை மனதிற்குள் மனமுருகி வேண்ட, தீய ஆவி சீடரை பின் தெடராது நின்றது.

சீடரோ ஆவியைப் பார்த்து உரத்த குரலில் யார் நீ! ஏன் என்னை பின் தொடர்கிறாய் என்று கேட்க, அதற்கு அந்த ஆவி, சுவாமி நீங்கள் சித்தரின் சீடன் என்பதை அறியாமல் பின் தொடர்ந்து விட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள் என்று ஓடி மறைந்தது.

சுவாமிகள் தன் கடைசி காலத்தை உணர்ந்து தான் சொல்லிய நேரத்தில் 02.09.1965 ஆம் ஆண்டு ஆவணி மாதம் அனுஷம் நட்சத்திரத்தில் சித்தியடைந்தார்.

சித்தரின் சீவசமாதிக்குப்பின் அவரது சமாதி மூடப்பட்டு, 48 நாட்கள் மண்டலாபிசேகம் முடிந்து ஊரார் முன்னிலையில் சமாதியை திறந்து பார்க்க,

சித்தரின் உடல் அப்படியே இருந்தது. சமாதிக்குள் ஏற்றிவைத்த விளக்கும் தொடர்ந்து எரிந்து கொண்டே இருந்தது.

வாழும் காலத்தில் நாம் தரிசிக்கத் தவறிய தவயோகியின் சமாதியையாவது இப்போது தரிசித்து நமது கர்மவினைகளை தவிர்ப்போம்.

**சித்தர்களை வணங்கி அவன்தாள் பணிவோம்!**

**சீரான வாழ்க்கையை சிக்கலின்றி பெறுவோம்!**

**சீவபீட முகவரி:**

**ஸ்ரீ மத் அருளானந்த அருணாச்சல சுவாமிகள், நரசிங்கபுரம், அரக் கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.**

சென்னையில் இருந்து வருபவர்கள் காஞ்சிபுரம் அரக்கோணம் சாலையில் நரசிங்கபுரம் என்ற கிராமத்தைக் காணலாம். அங்கேதான் நமது சுவாமிகளின் சீவபீடம் அமைந்துள்ளது.

**பேரூந்து வழித்தடம்: சென்னை அரக்கோணம்**

**இறங்குமிடம்: நரசிங்கபுரம்.**

**புகைவண்டி வழித்தடம்: சென்னை கடற்கரை அரக்கோணம்**

**இறங்குமிடம்: அரக்கோணம் இரயில் நிலையம். இங்கிருந்து பேரூந்து, ஷேர் ஆட்டோவில் சீவபீட ஆலயத்தை அடையலாம்.**

**- (தொடரும்)**


எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

# உழவாரத் தொண்டன்

# திருநாவுக்கரசர்

**தி**ருநாவுக்கரசர் என்ற அப்பர் பெருமான் திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருவாமூர் என்னும் திருத்தலத்தில் வேளாளர் குலத்தைச் சார்ந்த புகழனார் மாதினி அம்மையார் தம்பதிகளுக்கு மகனாக அவதரித்தார்.

பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் மருள்நீக்கியார். அவருக்கு திலகவதியார் என்ற தமக்கையும் உண்டு. திலகவதியார் திருமண வயது அடைந்ததும் அவரைத் தமக்குத் திருமணம் செய்து வைக்கும்படி மன்னனிடம் தளபதியாக இருந்த சிவ பக்தரான கலிப்பகையார் என்பவர் கேட்டார்.

பெற்றோரும் மகிழ்ந்து திருமண ஏற்பாடுகள் செய்தபோது, அரசன் கலிப்பகையாரை வேற்று நாட்டின் மீது படையெடுக்க ஆணையிட்டான். போருக்கு சென்ற கலிப்பகையார் நீண்ட நாள் ஆகியும் திரும்பாததால், அந்த வருத்தத்திலேயே, திலகவதியின் பெற்றோர்கள் இறந்தனர். அதன்பின்பு, கலிப்பகையாரும் போரில் உயிர் துறந்தார் என்ற செய்தியறிந்து, திலகவதியார் திருமணம் செய்து கொள்ளாமல், சிவநெறியில் நின்று தனது தம்பியை வளர்த்து வந்தார்.

மருள்நீக்கியார் பல நூல்களையும், கலைகளையும் கற்று, சமணர்களுடன் ஏற்பட்ட தொடர்பால் சமண மதத்தில் சேர்ந்தார். தமக்கையார் எவ்வளவோ அறிவுரை கூறியும் கேளாமல், சமணர்களின் தலைநகரமாகிய பாடலிபுத்திரத்தை அடைந்து "தருமசேனர்" என்ற பெயருடன் அவர்களுக்குத் தலைவரானர். திலகவதியார் திருவாமூரிலிருந்து பண்ருட்டி அருகில் உள்ள திருவதிகை என்ற தலத்தை அடைந்து, தம் தம்பி விரைவில் சைவ சமயத்திற்குத் திரும்ப வேண்டும் என்று இறைவனை வேண்டி இறைப்பணியில் ஈடுபட்டார்.

இந்நிலையில் தருமசேனருக்கு கொடிய சூலை நோய் ஏற்பட்டது. சமணர்கள் எவ்வளவோ முயன்றும் அந்தநோயை தீர்க்க முடியவில்லை. முடிவில் தருமசேனர் திலகவதியாரைத் தேடி திருவதிகையை அடைந்தார். திலகவதியார் அவரைக் கோயிலுக்கு அழைத்துச் சென்று திருநீறு வழங்கினார்.

தருமசேனர் தன் தமக்கை திலகவதியார் கூறிய அறிவுரையை பின்பற்றி சிவபெருமானை வணங்கி "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்ற பதிகம் பாட, சிவபெருமான் அவரது நோயை நீக்கி, "நாவுக்கரசர்" என்ற பட்டத்தையும் அளித்தார்.

திருநாவுக்கரசர் சைவ சமயத்திற்குத் திரும்பியதால், கோபமுற்ற சமணர்கள் பல்லவ மன்னன் மகேந்திரவர்மனை



சந்தித்து திருநாவுக்கரசர் மேல் குற்றம் சாட்டினர். உடனே அரசன் சினம் கொண்டு அவரை அழைத்து வருமாறு உத்தரவிட்டான்.

அரசன், மதம் மாறிய நாவுக்கரசரை சுண்ணாம்புக் களவாயில் வைத்துக் கொல்ல ஆணையிட்டான். அதன்படி நாவுக்கரசரை சுண்ணாம்புக் காளவாயில் வைத்து தீ மூட்டி ஒரு வாரம் கழித்துத் தீயை அணைத்துச் காளவாயைத் திறந்து பார்க்க, திருநாவுக்கரசர் எப்படி அமர்த்தி வைக்கப்பட்டிருந்தாரோ, அப்படியே பத்திரமாக இருந்தார்.

எனவே, அவருக்கு நஞ்சூட்டிய சோறு கொடுத்தும், யானையை வைத்து இடறவும் முயன்று தோற்றனர் சமணர்கள். யானை நாவுக்கரசரை வணங்கி விட்டு சமணர்களைக் கொன்றது. பிறகு திருநாவுக்கரசரைக் கல்லில் கட்டிக் கடலில் போட்டனர். திருநாவுக்கரசர் "நமச்சிவாயப் பதிகம்" பாட, கல் கடலில் தெப்பமாக மிதந்து திருப்பாதிரிப்புலியூர் அருகே கரை சேர்ந்தார். அந்த இடம் இன்றும் கரையோற்றிவிட்டான் குப்பம் என்று அழைக்கப்படுகின்றது. இதைக் கேள்விபட்ட மன்னன் மனம் வருந்தி, அவரிடம் மன்னிப்புக் கேட்டு சைவ சமயத்தைத் தழுவினான்.

தான் சமண சமயத்தில் சேர்ந்த தவற்றை இறைவன் மன்னித்து விட்டாரா என்று அறிய விரும்பி, மன்னித்தது உண்மையானால் தன்மீது சிவச் சின்னமாகிய சூல முத்திரையை பொறிக்கும்படி வேண்டினார். நாவுக்கரசர்.

சிவபெருமான் அருளால் ஒரு சிவபூதம் தோன்றி நாவுக்கரசரின் தோளில் சூலம், காளை முத்திரைகளை இட்டு மறைந்தது. பின்னர், பல தலங்களைத் தரிசனம் செய்துக் கொண்டு, திருஞானசம்பந்தரைப் பார்க்கும் பொருட்டு சீர்காழிக்குச் சென்றார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரை வரவேற்று, "அப்பரே" என்று அழைத்தார். அன்று முதல் திருநாவுக்கரசர் "அப்பர்" ஆனார் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தரை "பிள்ளையே" என்று அழைத்தார். அன்று முதல் ஞானசம்பந்தர் பிள்ளையானார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், திருநாவுக்கரசு நாயனாரும் வேதாரணியத்தை அடைந்து, ஆலயத்திலே பிரவேசிக்கச் செல்லும் முன், ஆலயக்கதவு அந்நாள் முதல் இந்நாள் வரைக்கும் அடைக்கப்பட்டு இருக்கின்றது என்பதை அறிந்து,

திருக்கதவுக்கு முன் வந்து, திருஞானசம்பந்தர், அப்பரை நோக்கி "அப்பரே! நாம் எப்படியும் சுவாமியை நேர்முகவழியே சென்று தரிசிக்க வேண்டும். ஆதலால் இந்தத் திருக்கதவு திறக்கப்படும் பொருட்டு நீரே திருப்பதிகம் பாடும்" என்றார்.

உடனே அப்பரும் "பண்




ணினேர் மொழியாள்" என்னுந் திருப்பதிகத்தைப் பாட, அது திறக்கப்படவில்லை. அப்பர் பெருமான் மீண்டும்,"இரக்கமொன்றிலீர்" என்ற பாடலைப் பாடி வணங்கினார். உடனே வேதாரணியேசுரருடைய திருவருளினாலே திருக்கதவு திறந்து கொண்டது.

அப்பொழுது நாயன்மார்கள் இருவரும் விழுந்து வணங்கினார்கள் அடியார்கள் அனைவரும் ஆனந்த கோசமிட்டார்கள். இருவரும் இறைவனை தரிசித்து வெளியே வந்தனர்.

அப்பொழுது அப்பர் பெருமான் திருஞானசம்பந்தரை நோக்கி, "எம்பெருமானுடைய திருவருளினாலே இனி இந்தக் கதவு பக்தர்களுக்காக எப்போதும் திறந்து மூடும்படி அருள் செய்து, இப்போது இத்திருக்கதவு மூட திருப்பதிகம் பாடும்படி வேண்ட, திருஞானசம்பந்தரும் முதற்பாட்டுப் பாடியமாத்திரத்திலே திருக்கதவு மூடிக்கொண்டது.

அதுகண்டு, நாவுக்கரசர்,திருக்கதவு திறக்க, யாம் இருபாடல்கள் பாடவேண்டியதாய் இருந்தது. அதே திருக்கதவு உமது ஒரு பாடலிலேயே மூடிக்கொண்டதே! அப்படியானால் நான் இன்னும் பக்குவம் பெற வேண்டும் போலும் என்று விசனப்பட,

இறைவனோ அசரீரியாக, அப்பரே உமது பாடலில் சற்றே மெய்மறந்து போனேன். அதனாலே கதவு திறக்க தாமதமாயிற்று வேறொன்றுமில்லை என்று அருளிச்செய்தான்.

அதன்பின் பல தலங்களுக்குச் சென்ற அப்பர் திங்களூரை அடைந்தார். அந்த ஊரில் அப்பூதி அடிகள் என்பவர்

திருநாவுக்கரசர் மேல் அன்பு கொண்டு, அவர் பெயரில் அன்னசத்திரம், கிணறு, குளம், நந்தவனம் அமைத்தும், தம் பிள்ளைகளுக்கு அவர் பெயரைச் சூட்டியும் மகிழ்ந்தார். இதைக் கேள்விப்பட்ட திருநாவுக்கரசர், அப்பூதி அடிகளைக் கண்டு தம்மை அடையாளம் காட்ட, அவரும் மகிழ்ந்து அவருடைய இல்லத்துக்கு விருந்துண்ண அழைத்தார்.

உணவு தயாரானதும் வாழை இலை பறிக்க மூத்த மகனை அனுப்ப, அவனை நாகம் தீண்டியது. நஞ்சு தலைக்கேற அவன் ஓடிவந்து இலையைக் கொடுத்து விட்டு இறந்தான். இந்த விபரம் அப்பருக்குத் தெரியாமல் இருக்க பெற்றோர், மகனை ஒரு பாயில் சுருட்டி வீட்டின் பின்புறம் வைத்துவிட்டு அப்பரை விருந்துண்ண அழைத்தார்கள்.

அவரும் வந்து அமர்ந்து அனைவருக்கும் திருநீறு கொடுக்க, மூத்த மகனை அழைத்தார். பெற்றோர் உண்மையைச் சொல்ல, அவர் இறந்த உடலை கோயில் முன் கொண்டு வரச்செய்து பதிகம் பாடி அவனை மீண்டும் உயிர்ப்பித்தார். பின்னர் அனைவரும் ஒன்றாக அமர்ந்து விருந்துண்டனர்.

திருப்புகலூர் என்ற தலத்தில் திருஞானசம்பந்தருடன் இணைந்து முருக நாயனார் என்பவர் மடத்தில் தங்கியிருந்தனர். அங்கு சிறுத்தொண்ட நாயனார், திருநீலநக்க நாயனார் ஆகிய இருவரும் வந்து உரையாடினர். ஐந்து நாயன்மார்களும் சந்தித்துக் கொண்ட அற்புதக் காட்சி முருக நாயனாரின் மடத்தில் நடந்தது. பின்னர், சம்பந்தருடன் வேதாரண்யம் சென்று அடைக்கப்பட்டிருந்த கோயில் கதவு திறக்கப் பாடினார்.

பின்னர், தனியாக பல தலங்களைத் தரிசனம் செய்து கயிலாய மலையைக் காண தொடர்ந்து சென்றார். வயதின் மூப்பு தன்மையால் அவர் களைப்படைந்தார். எனவே, சிவபெருமான் ஒரு குளத்தை உண்டாக்கி அங்கு முனிவர் வேடத்தில் வந்து அவரைப் பார்த்து "எங்கு செல்கிறீர்" என்று கேட்க, "கயிலைக் காட்சியைக் காணச் செல்கிறேன்" என்றார் அப்பர். அதற்கு முனிவர், "மனிதரால் காண முடியாது, அதனால் திரும்பிச் செல்லுங்கள்" என்று கூற, அதற்கு அப்பர், "கயிலைக் காட்சியைக் காண்பேன், இல்லையேல் உயிர் துறப்பேன்" என்றார்.

உடனே, இறைவன் அசரீரியாக, "இங்குள்ள குளத்தில் மூழ்கி திருவையாறு செல்லுங்கள், அங்கு கயிலாயக் காட்சியைக் காணலாம்" என்றார். அப்பரும் அவ்வாறே செய்ய, திருவையாற்றில் இறைவன் திருக்கயிலாயக் காட்சியை காட்டி அருளினார். அப்பர், மேலும் பல திருத்தலங்களைத் தரிசனம் செய்து உழவாரப் பணி செய்தார்.

81 வயது வரை சமயப்பணி செய்த அப்பர் சித்திரை மாதம் சதய நட்சத்திரத்தில், திருப்புகலூர் தலத்தில் இறைவனடி சேர்ந்தார். இவர் பாடிய பாடல்கள் சைவத்திருமுறைகளில் நான்கு முதல் ஆறு முடிய மூன்று திருமுறைகளாக தொகுக்கப்பட்டுள்ளது.

திருநாவுக்கரசர், 49,000 தேவாரப் பதிகங்களைப் பாடியுள்ளார். இவற்றில்

சில பதிகங்கள், தாள அமைப்பினைச் சேர்ந்ததாகக் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு தாள அமைப்புடன் பாடப்பட்டவற்றைப் பண்ணாங்கப் பாடல்கள் என்றும், தாள அமைப்பு இல்லாத பாடல்கள் சுத்தாங்கப் பாடல்கள் என்றும் அழைக்கப் படுகின்றன.

திருத்தாண்டகம், திருவிருத்தம், திருக்குறுந்தொகை ஆகியவை அப்பர் பாடிய சுத்தாங்கப் பதிகங்கள். அப்பரின் பாடல்கள் தமிழ்ச் சுவையும் பக்திச் சுவையும் தோய்ந்தவை. உதாரணத்திற்கு,

**"மாசில் வீணையும் மாலை மதியமும்**

**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**

**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசன் எந்தை இணையடி நீழலே"**

**ஈசனுடைய அடிகளில் சரணடைந்தால், மர நிழல் தரும் குளுமை போன்று இருக்கும்"** என்று கூறிய அப்பர் அடிகள், "அந்த நிழலானது குற்றமற்ற வீணை இசை போன்றது, இளம் மாலையில் தோன்றிய நிலவின் குளுமையை ஒத்தது, வீசுகின்ற தென்றல் போன்றது, இளவேனிற் காலத்தின் உயிர்ப்பைக் கொண்டது, தாமரை மலர்களைச் சுற்றும் வண்டுகளைக் கொண்ட குளம் போன்றது" என்கிறார். அவர் உதாரணமாகக் கூறிய "அனைத்தும் மனதுக்கு இனிமை சேர்ப்பவை. அனைத்து இனிமைகளையும் ஒரு சேர அளிப்பது இறைவனது பாத நிழலே" என்கிறார் அப்பர்!

கூற்றாயின வாறு விலக்ககலீர்



கொடுமை பலசெய்தனநான் அறியேன் ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும் தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டா னத்துறை யம்பானே.

திருநாவுக்கரசர், இசைத்தமிழில் சிறந்த ஞானம் கொண்டவர். நான்காவது திருமுறையில் உள்ள பாடல்களில் திருநாவுக்கரசின் இசைத்திறன் வெளிப்படுகிறது.

இவருடைய பாடல்களில், கொல்லி, காந்தாரம், பியந்தைக்காந்தாரம்

சாதாரி, காந்தார பஞ்சமம், பழந்தக்கராகம்,பழம் பஞ்சுரம்,இந்தளம்

சீகாமரம்,குறிஞ்சி போன்ற பத்து பண்கள் காணப்படுகின்றன

பல்வேறு சிவாலயங்களுக்குச் சென்று தேவாரப் பதிகங்களைப் பாடினார். அத்துடன் சிவாலயங்களைத்

தூய்மை செய்யும் பணியையும் செய்தார். இதனை உழவாரப் பணி யென்று சைவர்கள் அழைக்கின்றனர். பல்வேறு சிவாலயங்களில் உழவாரப் பணி செய்து முன்னோடியாக இருந்தமையால், "உழவாரத் தொண்டர்" என அழைக்கப்பட்டார்.

இன்றும் சைவர்கள் உழவாரப் பணியின் தலைவராக நாவுக்கரசரையே கொள்கின்றனர். இவர் இறைவனை தொண்டு வழியில் வழிபட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

சமண சமயத்தைச் சேர்ந்த மன்னன் மகேந்திர பல்லவன் திருநாவுக்கரசரைப் பலவிதங்களில் துன்புறுத்தினான். அத்துன்பங்களைத் திருநாவுக்கரசர் இறைவன் அருளால் வென்றார். இத்தகைய துன்பங்கள் இழைக்கப்பட்டும், இறைவன் அருளால் மீண்டதைக் "கற்றுணைப் பூட்டியோர் கடலினுள் பாய்ச்சினும் நற்றுணை ஆவது நமச்சிவாயவே" எனும் நமச்சிவாயப் பதிகத்தில் பதிவு செய்துள்ளார். இறுதியில் மகேந்திர பல்லவனும் சைவ சமயத்தைத் தழுவினான்.

தனது முதிர்ந்த வயதில் சிறுவ ராயிருந்த திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாருடன் சேர்ந்து தல யாத் திரைகள் செய்தார். மேலும் திரு ஞானசம்பந்தரால் அப்பர் எனவும் அழைக்கப்பட்டார். இவர் பாடிய தேவாரப் பாடல்கள் 4, 5, 6 ஆகிய மூன்று திருமுறைகளில் வகுக்கப்பட் டுள்ளன. சமயத் தொண்டு புரிந்த திருநாவுக்கரசர் 81ஆவது வயதில் திருப்புகலூரில் சித்திரைச் சதயத்தில் இறைவனுடன் கலந்தார்.


# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

# தேவராக வந்த வள்ளலார்

ஒவ்வொரு ஆண்டும், தைப்பூசத் தன்று வடலூரில் சமரச சுத்த சன்மார்க் கம் பற்றி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் சொற்பொழி வாற்றுவார்கள். அவரது பேச்சைக் கேட்பதற்காகவே ஆயிரக்கணக்கான வள்ளலாரின் பக்தர்களும் தேவரின் அபிமானிகளும் வடலூர் வருவர்.

வழக்கம் போல் தைப்பூசத்தன்று வடலூரில் தேவர் பேசத் தொடங்குவ தற்கு முன்பு. தமிழ்நாட்டின் முன்னாள் முதல் அமைச்சராக இருந்த திரு.ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் தேவரிடம் ஒரு செய்தியைச் சொன்னார்.

"வடலூர் இராமலிங்க அடிகளாரின் உறவினர் ஒருவருடைய வீட்டில் இராமலிங்க அடிகளார் பாடிய ஒன்பது பாடல்கள் அடங்கிய ஏட்டுச்சுவடி இருக்கிறது. இதுவரை அச்சுக்கு வராத அந்தப் பாடல்களை மடத்துக்குத் தந்தால், அச்சில் ஏற்றி நூல் வடிவாக எல்லோரும் படிக்கும் வண்ணம் செய்யலாம்" என்றும் "அடிகளாரின் உறவினரிடம் பல தடவை கேட்டும் அவர் தர மறுக்கிறார். தாங்கள்தான் இதற்கு ஒரு வழி செய்ய வேண்டும்" என்றும் ஓ.பி.ராமசாமி ரெட்டியார் தேவரிடம் கூறினார்.

"அந்தச் சுவடியை வரவழைக்க வேண்டிய விதத்தில் வரவழைப்போம். நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்று ஓ.பி.ஆரிடம் கூறிவிட்டு தேவர் சொற்பொழிவாற்றத் தொடங்கினார்.

இராமலிங்க அடிகளாரின் அருட்பா பற்றி ஒரு மணி நேரம் பேசிய தேவர் இராமலிங்க அடிகளார் உறவினர் பற்றி, பேச்சை ஆரம்பித்தார். "இராமலிங்க அடிகளார் அவர்களால் பாடப்பட்டு. இதுவரை அச்சுக்கு வராமல் உள்ள ஏட்டுச் சுவடியில் ஒன்பது பாடல்கள் இருப்பதாகவும், அந்தச் சுவடியை இராமலிங்க அடிகளாரின் உறவினர் ஒருவர் வைத்துக் கொண்டு மடத்துக்குத் தர மறுப்பதாகவும் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் என்னிடத்திலே சொன்னார்கள்.

அடிகளாரின் உறவினருக்கு இந்தக் கூட்டத்தின் வாயிலாக ஒன்றை சொல்கிறேன். அந்தச் சுவடியை மடத்துக்குத் தந்து மக்களுக்குப் பயன்படும்படி செய்யுங்கள். அல்லது தாங்களே அச் சுவடியை நூலாக வெளியிடுங்கள். இரண்டையும் செய்யாமல் தாங்கள் பிடிவாதமாக இருப்பதால். அடிகளாரின் அந்த ஒன்பது பாடல்களும் உலகத்துக்குத் தெரியாமலே போய்விடும் என்று நீங்கள் நினைக்க வேண்டாம்.

இதுவரை உலகத்திற்குத் தெரியாமல் நீங்கள் ஒளித்து வைத்திருந்த அந்த ஒன்பது பாடல்களையும் அடியேன் பாடுகிறேன் கேளுங்கள்" என்று



மடைதிறந்த வெள்ளம் போல் மடமட வென அந்த ஒன்பது பாடல்களையும் வெங்கல நாதத்தில் தேவர் பாடி முடித்தார்.

பாடி முடித்த சிறிது நேரத்தில் இராமலிங்க அடிகளாரின் உறவினர் கையில் அந்த ஏட்டுச் சுவடியோடு வந்து தேவரின் பாதத்தில் விழுந்து வணங்கி, "அய்யா, தாங்கள் தேவரல்ல, தாங்கள்தான் இராமலிங்க சுவாமிகள், என்னை மன்னித்து விடுங்கள்" என்று கூறி. "தாங்கள் பாடிய ஒன்பது பாடல்கள்தான் இந்த ஏட்டுச் சுவடியில் இருக்கின்றன. தயவு செய்து இதனை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று சுவடியைத் தேவரிடம் தந்தார்.

தேவர் அந்தச் சுவடியைப் பெற்றுக் கொண்டு "எல்லாம் ஈசன் செயல்" என்று சொல்லி முடிப்பதற்குள், ஓ.பிரா மசாமி ரெட்டியார் எழுந்து வந்து, தேவர் அவர்களைக் கட்டிப்பிடித்து, அவரது கைகளை எடுத்து தனது கண்களில் ஒற்றிக் கொண்டு. "இராமலிங்க சுவாமிகளே நீங்கள்தான்" என்று உரக்க சத்தமிட்டுக் கூறினார்.

உண்மையும் அதுதானே! மகான்க ளுக்குள் உடல்தானே வேறுபாடு. ஆன்மா ஒன்றுதானே!

ஒருமுறை வள்ளிமலை சுவாமிகள் தன்னுடைய இளமைப்பருவத்தில் திருவண்ணாமலை சென்று இரமணாஸ்ரமத்தில் தங்கியிருக்கும் போது, பகவான் இரமணரிடம் தீட்சை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்பி அவரிடம் பணிவுடன் எனக்கு தீட்சை அளித்து அருள் புரியுங்கள் பகவான் என்று வேண்டுகிறார்.

பகவானோ, புன்சிரிப்புடன் அவரைப் பார்த்துவிட்டு ஏதும் சொல்லாமலே மோனத்தில் மூழ்கி விடுகின்றார்.நேரம் போனதே தவிர பகவான் இமணரோ கண் திறப்பதாய் இல்லை.

மனம் வெறுத்துப்போன சுவாமிகள், சிறிது நேரம் கழித்து அவ்விடத்தை விட்டு அகன்றார். எங்கே போவது

*என்று தெரியாமல் மலை மீது ஏறிப் போனார்.*

*கந்தாஸ்ரமத்திற்கு முன்பாக "தங் கக்கை" சேசாத்திரி சுவாமிகள் ஒரு பாறை மீது உட்கார்ந்திருக்கின்றார். வள்ளிமலை சுவாமிகள் அவரை கவனியாது சற்று முன்னே செல்ல, பின்னாளில் இருந்து சேசாத்திரி சுவாமிகள் அவரை அழைத்தார்.*

*வள்ளிமலை சுவாமிகளும் மரி யாதை நிமித்தமாக அவரின் முன் சென்று என்ன சுவாமி என்று கேட்க, அதற்கு அவரோ, என்ன, தீட்சை கொடுன்னு கேட்டே, எப்போ வாங்கிக்கறே என்றாராம்.*

*வள்ளிமலை சுவாமிக்கு ஆச்சர்யம். நாம் இரமணரிடம் அல்லவா கேட்டோம். இவர் தருகின்றேன் என்கிறாரே என்றவாறே அவரிடம் அமர்ந்து உபதேசம் பெற்றுக் கொண்டு மாலையில் மலையில் இருந்து கீழே இறங்கி வருகையில் பகவான் இரமணர் மலைமீது ஏறிக்கொண்டிருந்தார்.*

*அப்போது வள்ளிமலை சுவாமி யைப் பார்த்து என்ன உபதேசம் ஆச்சா..? என்றாராம்.*

## உன்னையே நீ அறிவாய்!

தியானம் என்பது சாதாரண விஷயமல்ல. சாதாரண விஷயத்திற்காகவும் அல்ல தியானம்,புலன்களுக்கு அப்பால் நிகழ்வது. புலன்களுக்கு அப்பாற்பட்ட தியானத்திற்கு சிந்தை எனும் ஒரு எல்லைக்கோடு உண்டு. சிந்தை என்பது சித்தத்தின் இரண்டாவது பகுதி. அதனுடைய மற்றொரு வேலை நல்லது கெட்டதை பிரித்தறிவது.

ரோஜாச்செடியில் கிளைகள், இலைகள், மலர்கள், முட்கள் என எல்லாம் உள்ளன. மலர் இருக்கும் இடம் தெரிய மனக்குவிப்பு அவசியமாகிறது. ஆனால் முள்ளில் படாமல் பூவைப் பறிக்க வேண்டும். அன்பு என்பது மலர். காமம் என்பதே முள். ஆனால் முள்ளில்லாத ரோஜா இல்லை. காம இச்சை எனும் முள்ளில் படாமல் அன்பு எனும் மலரை பறிப்பது எப்படி என்பதே சிந்தை என்ற அறிவு.

தியானம் என்பது அன்பின் மலரை இறைவனுக்கு காணிக்கையாக்குதல். நமது உடல் என்னும் ரோஜா செடியில் மனம் கமழும் புனித அன்பென்னும் ரோஜாப்பூ நல்ல குணங்களின் வாசனை வீச உள்ளது. ஆனால் ஆங்காங்கே புலன் இச்சைகள் என்ற ஆசாபாசங்களும் உண்டு. தியானம் செய்வதன் நோக்கம் அந்த ஆசாபாசங்களுக்கு அகப்படாமல் அன்பெனும் மலரை பறித்து இறைவனடியில் அர்ப்பணம் செய்வதுதான்.

பண்டை நாட்களிலிருந்தே பாரத நாட்டில் தியானத்திற்கு மிக முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இப்போதெல்லாம் பலர் தலைவலிக்கோ வேறு உபாதைக்கோதான் தியானம் செய்கின்றார்கள். தியானம் ஒன்றும் அப்படிப்பட்ட ஒரு சாதாரண விஷயம் அல்ல. தியானத்தை பயில்வது அன்பை வளர்க்கவும், தன்னை அறிவதற்கும்தான்!

# அதிசயங்கள் நிறைந்த

# அத்திரி மலை




திருநெல்வேலி அருகே உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் அமையப்பெற்றுள்ளது அத்திரி மலை. இது இயற்கை எழில் சூழ்ந்த காடுகள் மற்றும் பல அரிய வகை மூலிகைகள் நிறைந்த மலைப்பகுதியாகத் திகழ்கிறது. இங்கு யானை, செந்நாய், சிறுத்தை, மிளா போன்ற உயிரினங்கள் நிறைந்து வாழ்கின்றன.

பல தெளிந்த நீரோடைகளையும், நீர் ஊற்றுக்களையும் கொண்டு திகழும் இங்குத் தான் தென்னகத்தின் கங்கை என்று அழைக்கப்படும் கடனா நதி உற்பத்தியாகிறது. இந்தக் கடனா நதி, கருணை நதி என்றும் அழைக்கப்படுகிறது. அதிசயங்கள் பல நிரம்பிய இந்த மலைப்பகுதியை பற்றி இங்கு நாம் காண்போம்.

அத்திரி மலை பெயர்க்காரணம்: சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பு அத்திரி முனிவர் தனது மனைவி அனுசுயா தேவி மற்றும் அவரது சீடர்களுடன் இந்த அத்திரி மலைப் பகுதிக்கு பயணம் மேற் கொள்கிறார். இந்த மலைப் பகுதியின் அமைதியும், இயற்கை வளங்களும் பிடித்துப் போய் விட அங்கேயே குடில் அமைத்துச் சிறிது காலம் தங்குகிறார்.



தனக்கு ஏற்ற ஒரு இடத்தை அந்த வனப்பகுதியில் தேர்ந்தெடுத்த அத்திரி முனிவர் அங்குச் சிவபெருமானை குறித்து தவம் இயற்றுகிறார். அவரின் தவத்திற்கு இறங்கிய சிவபெருமான் அவர் முன்னர் காட்சியளித்து அவருக்கு அருள்புரிகிறார்.

பின் வந்த காலத்தில் அத்திரி மகரிஷியின் சீடராகக் கருதப்படும் கோரக்கர் இவ்விடத்தில் தனது குருவான அத்திரி மகரிஷிக்கு கோவில் ஒன்றை கட்டி வணங்கினார் என்றும், அதுவே தற்போது அத்திரி மலையில் இருக்கும் கோவில் எனவும் கூறப்படுகிறது. அத்திரி முனிவர் வாழ்ந்த இடம் என்பதாலும், அவருடைய கோவில் இங்கு இருப்பதாலும் இந்த மலைப் பகுதி அத்திரி மலை என்று அழைக்கப்படுகிறது.

அத்திரி மலை சிறப்புகள்: பசுமையான மரங்கள் மற்றும் அரிய மருத்துவ தாவரங்கள் மற்றும் மூலிகைகள் நிறைந்த இந்த அத்திரி மலையில் அகத்தியர், அத்திரி மகரிஷி, கோரக்கர், தேரையர் போன்ற முனிவர்களும், சித்தர்களும் வாழ்ந்துள்ளார்கள். இன்றும் இங்குப் பல சித்தர்கள் சூட்சுமமாக வசித்து வருகிறார்கள்.

இப்பகுதி மிகவும் செழிப்பான இடமாக இருக்கிறது. இந்த மலைகளில் தோன்றும் நீரோடைகள் மற்றும் ஆறுகள் பல ஆண்டுகளாக வற்றாமல் வந்து கொண்டிருப்பது அதிசயமே. இந்த மலைகளிலிருந்து வரும் குளிர்ந்த தென்றல் காற்று இங்குள்ள அற்புத மூலிகைகளின் மேல் பட்டு வீசுவதால், அந்தக் காற்று நம்மைத் தொட்டவுடன் நம் உடலில் ஒருவித புத்துணர்ச்சி ஏற்படுகிறது.

சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை, யோகிகள் மற்றும் சித்தர்கள் இந்த மலையில் உள்ள மூலிகைகளைப் பயன்படுத்தி நோயில்லா பெருவாழ்வு வாழ்ந்து துள்ளார்கள். தற்போதும் இங்குப் பல மருத்துவ குணமுடைய மூலிகைகள் நிறைந்து காணப்பட்டாலும் அதனால் இக்கால தலைமுறையினரால் அடையாளம் காணமுடிவதில்லை.

இங்கு அத்திரி மகரிஷியின் சீடரான கோரக்கர் தியானம் செய்த மரம் இன்றும் இருப்பதாக நம்பப்படுகிறது. இந்த மரத்தின் அடியில் அமர்ந்து தியானம் செய்தால் விரைவில் தவம் சித்தியாகும் என்று கூறப்படுகிறது.

பன்னீர் மழை பொழியும் மரங்கள்: ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதத்தின் முதல் ஐந்து நாட்களும், பங்குனி மாதத்தின் கடைசி ஐந்து நாட்களும் இங்குள்ள அமிர்தவர்ஷினி எனப்படும் மரத்திலிருந்து பன்னீர் மழை பொழியும் அதிசய நிகழ்வு நிகழ்ந்து வருகிறது.

வெப்பமான கோடை காலங்களில் இந்த மரங்களி லிருந்து இவ்வகையான மழை பொழிவது மிகவும் அதிசயமாக இருக்கிறது. இந்தக் கோவிலின் பகுதியில் பல சித்தர்கள் அரூபமாக வாழ்ந்து வருவதாகவும், அவர்களின் அருளால் தான் இந்தப் பன்னீர் மழை பொழிவதாகவும் நம்பப்படுகிறது.

வனத்துறை அதிகாரிகள் இந்த மழை பொழிவு பற்றி ஆராய்ச்சி மேற்கொண்டபோது, இந்த மழைக்கு காரணம் இந்த மரத்தில் காணப்படும் சிறிய பூச்சிகள் என்று தெரிய வந்த தாகக் கூறுகிறார்கள். அந்தப் பூச்சி கள் அமிர்தவர்ஷினி மரங்களின் பட்டைகளிலிருந்து நறுமணமிக்க தண்ணீரை உறிஞ்சி மழையாகப் பொழிகின்றன என்று கூறுகிறார்கள்.

எனினும் இந்த அதிசய நிகழ்வு எல்லா நாட்களிலும் நடை பெறுவதில்லை. ஒரு ஆண்டுல் ஒரே சில நாட்களில் மட்டுமே நிகழ்வதற்கான காரணத்தை யாரும் இதுவரை கண்டுபிடிக்கவில்லை. இந்தப் பன்னீர் மழை பொழிவு கோவிலின் கிழக்கு மற்றும் மேற்கில் அமைந்துள்ள இரண்டு குறிப்பிட்ட மரங்களில் மட்டுமே நிகழ்கிறது. இந்தச் சிறிய பூச்சிகள் எவ்வாறு பெரிய அளவிலான மழையை பொழிய செய்ய முடியும் என்பது விடை தெரியாத கேள்வியாகத்தான் இன்றுவரை இருக்கிறது.

அத்திரி மலையில் தோன்றும் கடனா நதி: இயற்கை வளங்கள் பல நிறைந்த இந்த மலைப்பகுதியில் தான் கடனா நதி உற்பத்தியாகிறது. இந்த நதியானது அத்திரி முனிவரால் தோற்றுவிக்கப்பட்டதாகவும், அத்திரி மகரிஷியின் தாகத்தை தணிப்பதற்காக அவர் மனைவி கங்கை தேவியை



வேண்டிட, கங்கா தேவியே இங்குக் கடனா நதியாகத் தோன்றியதாகவும் இரு வேறு நிகழ்வுகள் கூறப்படுகின்றன. எது எப்படி இருந்தாலும் இங்கு உற்பத்தியாகும் இந்தக் கடனை நதி நீர் கங்கை நதிக்கு நிகரான மகத்து வங்களை பெற்றுள்ளதாக இந்த நீரில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான சோத னைகள்மூலம் நிரூபிக்கப்பட் டுள்ளது என்பது வியக்கத் தக்க உண்மை ஆகும்.

அத்திரி மகரிஷி அனுசுயா தேவி கோவில்: இந்த மலைப்பகுதியின் அடர்ந்த காடுகளின் மத்தியில் அமையப்பெற்றுள்ளது அத்திரி மகரிஷி அனுசுயா தேவி திருக்கோவில். இந்தக் கோவில் அமையப்பெற்றுள்ள பகுதியில் தான் முன்னர் அத்திரி மகரிஷி தவம் இயற்றியதாகக் கூறப்படுகிறது.

இங்கு விநாயகர், முருகன், சிவன், அத்திரி மகரிஷி அனுசுயா தேவி ஆகியோருடன் உடன் கோரக்க முனிவருக்கும் சன்னதி உள்ளது. தற்போது இந்தக் கோவிலுக்கு வரும் பக்தர்களின் முயற்சியால் சிறு சிறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு இந்தக் கோவில் வளர்ச்சி அடைந்துள்ளது.

தற்போது இங்கு வரும் பக்தர்களின் கூடுதல் முயற்சியால் கங்கா தேவியின் விக்கிரகமும் நிறுவப்பட்டுள்ளது. எனினும் மலைப்பகுதியில் அடர்ந்த காடுகளுக்கு மத்தியில் அமை யப்பெற்றுள்ள கோவில் என்பதால் இங்குச் சென்று வழிபடப் பல்வேறு கட்டுப்பாடுகள் உள்ளன.

அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாட்களில் இங்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. அன்று வனத்துறையின் முறையான அனுமதி பெற்று இந்தக் கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து வரலாம்.

**ச**ந்தோசமாக இருங்கள். வாழ்வில் எப்போதும் இன்பத்துடன் இருங்கள். ஆனால் அதில் சிக்கிக் கொள்ளாதீர்கள். அதாவது உங்களை கட்டுப்படுத்தும் கேளிக்கைகளை தேர்ந்தெடுக்காதீர்கள்.

நீங்கள் தேர்ந்தெடுக்கும் கேளிக்கைகள் உங்களை எப்போதும் கட்டுப்படுத்தாது, பாதிக்காது என்றால் அதைச் செய்யலாம். நம் நோக்கம் எப்பொழுதும் ஆனந்தமாக இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்க!

## நிரந்தர ஆனந்தம்

கேளிக்கையின் மூலம் வரும் இன்பம் பின்னர் துன்பத்தை தரும் என்றால் அது கேளிக்கை அல்ல. நமது நிலையான லட்சியமே உன்மையான பேரின்பமாகும்.

ஆன்மீக சாதகர் அல்லது பக்தர் பொறுப்புள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றார்கள். அவர் சிரிக்கக்கூடாது, கேளிக்கை கூடாது. என்று எண்ணுகின்றார்கள் அப்படி என்றால் அது வாழும் வாழ்க்கையல்ல.

வாழ்க்கை எப்பொழுதும், இன்பமும், மகிழ்ச்சியும், கொண்டாட்டமுமாக இருக்க வேண்டும். மனதை சிக்கலில் சிக்க வைக்காமல், நல்ல நிலையில் வைத்திருந்தால்தான் அத்தகைய வாழ்க்கை சாத்தியமாகும்.

# எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES










GS Caltex
Castrol

**P.Sivasaravanan B.E.,**
**9843440806**

## Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON
LASTS LONG. REALLY LONG.









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

# சீரடி சாயிபாபா மகானா? அல்லது இறைவனா?

சீரடி சாயிபாபா மகானா? அல்லது இறைவனா? அவர் இறைவன் என்றால், பிறகு ஏன் அவர் "அல்லா மாலிக்" என்று கூறிக் கொண்டு இருந்தார்.

ஸ்ரீ ஷிர்டி சாயி பாபா மகான் அல்ல, இறைவனே! மகான்கள் இறை நிலை அடைந்தவர்கள். ஆனால் இறைவன் அல்ல. அப்படிப் பார்த்தால் அத்வைத நிலைப்படி அனைத்தும் பரப்பிரம்மமே. அந்த உயர்நிலையை அடையாமல் ஒருவர் நானும் இறைவன் எனச் சொல்வது நேர்மையற்ற செயல் அல்லவா?

ஆகவே தான் மகாபெரியவர், ஸ்ரீ ரமண பகவான் என பல மகான்கள் அந்த உயர் அனுபூதி நிலையை அடைந்த போதும் தங்களை இறைவன் எனச் சொல்லிக் கொண்டது இல்லை!

ஏனெனில், மகான்களும் முற்பிறவி பாதிப்புகளை அடைந்திருக்கின்றனர். இதில் ஒருவர் கூட விதிவிலக்கில்லை!

இந்த பூமியில் தாயின் கர்ப்பப் பையின் மூலம் பிறந்தவர்கள் அனைவருக்கும் இறைநிலை என்பது தங்களின் உயர் அனுபூதி நிலையின் மூலம் அடையப்படுவதே! அப்படி அனைவராலும் "அடையப்படுவது எது என்றால் அதுவே ஸ்ரீ சீரடி சாயி.

இப்போது ஒரு குழப்பம் ஏற்படுகிறது! சீரடி சாயிசத்சரிதத்தில் பாபாவை மகான் என்றும், துறவி என்றும் பல இடங்களில் அந்த நூலாசிரியர் எழுதியிருக்கிறார். ஒரு சிலர் அவரை தத்தரே என்கிறார்கள். சிலரோ அவரை அனுமனே என்கின்றனர். ஆக ஒரே குழப்பம்.

சீரடி சுவாமியின் சத்சரித நூல் பாபாவால் ஆசீர்வதிக்கப்பட்டது என்பது சத்தியமே! ஆனால் அதை எழுதிய நூலாசிரியர் ஒரு மகான் அல்ல. அவர் ஒரு சாமான்ய பக்தரே! மகான்களால் மட்டுமே இறைவனை



ஓரளவுக்காவது உணர முடிகிறது. காரணம் அவர்களின் ஆன்ம சாதனை! ஒரு பக்தர் பாபாவை பற்றி எழு துவ தற்கும், ஒரு மகான் பாபாவை பற்றி எழுதுவதற்கும் உள்ள வித்தியாசம் தூக்கத்திற்கும் தியானத்திற்கும் உள்ள வித்தியாசம் என்பதை நாம் உணர வேண்டும்.

இரண்டிலும் நாம் கண்களைத் தான் மூடுகிறோம் என்றாலும் இரண்டு நிலைகளிலும் ஆன்ம சாதனையில் உச்சம் பெறுவது தியானம் மட்டுமே! தியானமே ஞானம் தரும். தூக்கம் உடலுக்கு ஓய்வை மட்டுமே தரும். சத்சரிதம் எழுதிய அந்த பக்தர், தான் எப்படி பாபாவை பார்த்தாரோ அதை அப்படியே பதிவு செய்கிறார். ஆகையால் தான் சில இடங்களில் தெய்வம் என்கிறார்.மகான் என்கிறார். யோகி என்கிறார்.

பாபா அதற்கெல்லாம் அப்பாற் பட்டவர்! *ஒரு கடலை பார்த்து இதில் இன்ன இன்ன நதிகள் கலந்திருக்கின்றன எனச் சொன்னால் தவறு இல்லை. ஆனால் கடலை மனிதன் நதி என அழைப்பது போல் தான் பாபாவை மனிதன் மகான் என கற்பனை செய்வது! பாபாவிடம் அனைத்து தெய்வ ரூபங்களும் சங்கமம். அப்படி ஒரு அம்ச சங்கமமே ஸ்ரீ தத்த அம்சம்! அனுமன் ருத்ர அம்சம். ஆக ருத்ரனும் பாபாவிடம் சங்கமமே. விஷ்ணுவும் அவருள் சங்கமமே!

சிலர் பாபாவை ஆஞ்சநேயர் அவதாரம் என்கிறார்கள். ஆஞ் சநேயர் ராம நாமத்தை தவிர எதை யும் உச்சரிக்காதவர்.சுவாமியே அழைத்த போதும் வைகுண்டத்திற்கு செல்லாமல், ராமநாமமே போதும் என சதா ராம நாமத்தையே சொல்லிக் கொண்டிருக்கிற பூலோக சிரஞ் சீவி! சிரஞ்சீவி என்றால் நித்தியமாய் வாழ்பவர்கள் என்று பொருள்.

அவர்கள் பிறப்பதோ அவதரிப் பதோ இல்லை.ஸ்ரீ கிருஷ்ணரை அனுமன் தரிசித்த போதும் ராமநாமமே தனக்கு போதும் என்றவர். பாபா அனுமன் என்றால் "ராம ராம" என்றே உச்சரித்திருப்பாரே அன்றி "அல்லா மாலிக்!" என்பதாக அல்ல. காரணம் அவரது ஆன்ம சுபாவம் அது! அவர் வாயில் கிருஷ்ண நாமம் கூட வந்ததில்லை. அதுபோல் பாபா கிருஷ்ணனுக்கு தான் சீரடியில் கோவில் கட்ட சொன்னாரே அன்றி ராமனுக்கு அல்ல. ஆக அனுமன் வணங்கிய ராமரே ஸ்ரீசாயிராமனே தவிர பாபா அனுமன் அல்ல.

பாபாவை மகான் என கற்பனை செய்வது அவரை குறைவாக மதிப்பிடுவதே அன்றி வேறொன்றுமில்லை! சாம்பாரும் சுடுகிறது சூரியனும் சுடுகிறது என்ப தால் இரண்டும் ஒன்றாகி விடுமா? பிறர் பாபாவை பற்றி என்ன சொல்லி இருக்கிறார்கள் என்பது இங்கு முக்கி யமே இல்லை. பாபா தன்னைப் பற்றி என்ன சொல்லி இருக்கிறார் என்பதே பாபா பக்தர்களுக்கு முக்கியம்

ஆனால் இந்த காலத்தில் கண்ணில் பட்டவர்களை எல்லாம் மனிதர்கள் மகான்களாக்கிவிடுகிறார்கள்! காரணம் சுயநலம்! ஆகவே தான் "ஆசையே அழிவிற்கு காரணம்" என்று சொன்ன அவதார புத்தர் ஒதுக்கப்பட்டார். "அனைத்திற்கும் ஆசைப்படு!" எனச் சொல்கிறவர்கள் எல்லாம் மகானாக்கப்படுகிறார்கள்! கலியுக எச்சைகளின் மிச்ச கூத்து இது!

பிறகு ஏன் பாபா "அல்லா மாலிக்" என சொல்ல வேண்டும்? "பாபா மாலிக்" எனச் சொல்லி இருக்கலாமே?



*என்பது உங்கள் கேள்வி! பாபா ஏன் இஸ்லாமிய சூஃபி தோற்றத்தோடு வலம் வர வேண்டும்? பரப்பிரம்மம் ஷிர்டி பாபாவாக அவதரித்ததே இந்து இஸ்லாமிய ஒற்றுமையை உணர்த்தவே! அது சுதந்திரம் அடையாத காலம்! இஸ்லாமியர்கள் ஓரிறை கொள்கை உடையவர்கள்.அல் என்றால் இல்லை என்று பொருள். அல்லா என்றால் ரூபம் இல்லாதவன் என்று பொருள். உண்மையில் ஆன்மீகத்தில் அது ஒரு கோணம் மட்டுமே!*

*மகாவல்லவன் மனிதனுக்கு வழிகாட்ட உருவமும் எடுத்து வரலாம் என்பது பன்முகத்தன்மை. அரூபம், ரூபம் ஆகிய இரு வழியிலும் இறைவனை வழிபடுவது சனாதன தர்மம். இதுவே பன்முகத் தன்மை.*

*ஆனால் ஸ்ரீ சாயி பாபா காலத்தில் இஸ்லாமியர்களுக்கும். இந்துக்களுக்குமே பகைமை அதிகமாக வளர்க்கப்பட்டு வந்தது. இரண்டு இனத்திற்குமேபாபா வழிகாட்ட வேண்டும். காரணம் பரப்பிரம்மமான பாபா சமய சார்பற்றவர் என்பதால்,*

*அவர் மொழியால் "அல்லா மாலிக்" என்றார். செயலால், துளசி செடியை வளர்த்து நெருப்பை பாதுகாத்தார். மனிதர்களுக்கு முதலில் இறைமை மீது நம்பிக்கை வரவேண்டும். பக்தி வேண்டும்.அதன் பிறகே, தான் இறைவன் என்பதை உணர்த்த முடியும். முதலில் மண் வேண்டும். அதற்குப் பிறகே மண்பாண்டம் தயாரிக்க முடியும்!*

*மசூதியில் தங்கியபடி தனக்கு ஆரத்தி காட்ட வைத்தார். ஊர்வலம் வந்தார். ராமநவமியையும் இஸ்லாமிய பண்டிகையையும் சேர்ந்தே நடத்தச் சொன்னார். இரு மதத்தினருக்கும் ஒற்றுமையை வலியுறுத்தினார். இரு மதங்களின் மேன்மையை*

பரஸ்பரம் அந்த அந்த மதத்தினருக்கு எடுத்துரைத்து சகோதரத்துவத்தை வளர்த்தார். மனம் மாறவேண்டும் என்பதற்காக மதம் மாற வேண்டிய கட்டாயமில்லை என்பதை மனிதனுக்கு உணர்த்தினார்.

ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனிடம் தாங்கள் நின்றது போர்க்களம் என்பதால் போர் புரி என்றார். பூந்தோட்டமாக இருந்தால் பூக்கள் பறி என்றுதான் கூறியிருப்பார். மத ஒற்றுமையை பற்றிய போதனை கீதையில் இல்லை. காரணம் அப்போது சனாதன தர்மம் மட்டுமே இருந்தது.

ஆகவே சுவாமி மத ஒற்றுமையை கீதையில் குறிப்பிடாமல் பேதமற்ற நான்கு வர்ண ஒற்றுமையை மட்டுமே குறிப்பிடுகிறார்! சத்தியம் ஒன்றாயினும் கால மாற்றத்திற்கு தகுந்தாற் போல் இறைவனின் வார்த்தைப் பிரயோகங்களும் மாறுகின்றன.

மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதை உணர்த்தவே இறைவன் அவதாரமாக மண்ணில் இறங்கி வருகிறான் என்பதை உணர்ந்து விட்டால் சந்தேகம் தீர்ந்துவிடும்! "ஏன் பாபா அப்படி சொன்னார்? ஏன் பாபா அப்படி செய்தார்!" எனும் சந்தேகக் கேள்விகள். நமக்காகவே அப்படி சொன்னார்! அப்படி செய்தார்! என்பதாக மிக தீர்க்கமாய் நம்பினால் குழப்பம் தெளிவாகிவிடும்!

எடுத்த எடுப்பில் "நானே அல்லா" என்று பாபா ஒருவேளை சொல்லி இருந்தால் கலவரம் தான் நிகழ்ந்திருக்கும்! சமத்துவம் நிகழ்ந்திருக்காது! ஒவ்வொரு மனிதனும் தனது கர்ம கணக்குப்படி ஒவ்வொரு காலகட்ட சூழ்நிலையில் தான் ஞானம் அடைகிறான்! அதற்கு தகுந்தவாறே பாபாவும் செயல்படுகிறார்!

"இடம், பொருள், ஏவல்" என்பதை மனிதன் பயன்படுத்துவதற்காக இறைவன் அதை வாழ்ந்து போதிக்கிறார்! அனைவரிடமும் பேரன்போடு பாபா திகழ்ந்த போதும் ஒவ்வொருவரையும் பாபா ஒவ்வொரு விதத்திலேயே அணுகுகிறார்.அது தான் சரியும் கூட.கர்மாவையும் மறுபிறப்பையும் சில மதங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்காகவே அவ்விரண்டும் இல்லை என்பதாய் ஆகிவிடாது.

மண்ணைத் தோண்டினேன் தண்ணீர் ஊற்றெடுத்தது. ஆக மண்ணுக்குள் தண்ணீர் மட்டும் தான் இருக்கிறது. தங்கம் இல்லை எனச் சொல்வது போல் தான் கர்மாவும், முன்,பின் ஜென்மமும் இல்லை என்பது.

தங்கம் எடுக்க இன்னும் ஆழம் போக வேண்டும்! பாபா இறைவனே என்பதை அணுஅணுவாக அனுபவிக்க இன்னும் நாம் ஆன்ம சாதனையில் ஆழம் போக வேண்டும்!

மேலோட்டமாக மேல்புல் மேயும் நமக்கு மேகத்தின் கருணை எப்படி புரியும்!

சாதனையே செய்யாமல் வெறும் பேச்சு பேசித்திரியும் நமக்கு என்ன புரியுமோ அதுதானே புரியும்!

**எல்லாம் பாபா!**

**எல்லாமே பாபா!**


**சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க...**
**www.saidhyanalaya.org**

**சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர்**
**99418 16692**

# அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

**S.Jayanthy,**

*17/7* **A**, *பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,*
*அயனாவரம், சென்னை – 600 023.*

ஆன்லைனில் அனுப்ப:

**S.Jayanthy, INDIAN BANK**
**AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056**
**(Purasaiwakkam Branch) Chennai**

# இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. ரகு, நிஷா, சாய்ரியா.கொளத்தூர். ரூ.5000.

திரு. பாலகிருஷ்ணன். அண்ணாநகர்.ரூ.3000.

திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம். ரூ.2000.

திரு.சுகன்யா துரைராஜ். சென்னை. ரூ.1500.

டாக்டர்.சுந்தரவள்ளி.மந்தைவெளி.ரூ. 1000.

திரு.பலராமன் இந்துமதி. அயனாவரம்.ரூ.1001.

திரு.எஸ்.சண்முகம். விண்ணரசி ஜாக்குலின். அயனாவரம். ரூ.1000.

திருமதி.உமா விஜய் ஆனந்த். அயனாவரம். ரூ.800

திரு.மு.திருக்கைவேல் கோகிலா. ஓசூர். ரூ.501

திருமதி.ஜெய தேனிஷா ரகுபதி ராஜா கொளத்தூர்.ரூ.500.

திருமதி.பவித்ரா குடும்பத்தார். பெரம்பூர்.ரூ.500

திருமதி. ஜானகி சீனிவாசன். கொளத்தூர். ரூ.500.

திரு.வெங்கடாசலம்.டி.நகர். ரூ.500.

திரு.சின்னதுரை.குரோம்பேட்டை. ரூ.500

திரு.கேஸ்வர். ஈரோடு. ரூ.500

திரு.சிவக்குமார் ஹேமரம்யா குடும்பத்தார். அவிநாசி.ரூ.500.

திருமதி.பாக்கியவதி. ராணிப்பேட்டை. ரூ.400.

திருமதி. உமா முருகன். சின்னாளப்பட்டி.ரூ.400.

திரு. பத்ரி நாராமணன். நெய்வேலி. ரூ.300.

திருமதி.லதாபாபு, வேப்பம்பட்டு. ரூ.200

திரு. பாலசுப்பிரமணியன். திட்டை.ரூ.200.

திரு. அய்யாக்கண்ணு. குரோம்பேட்டை. ரூ.200.

திரு.கே.ராமமூர்த்தி. ஓய்வு.அசோக் லேலண்ட். கொளத்தூர்.ரூ.200.

திரு.குமரன் ஸ்டோர்ஸ் - டிராவல்ஸ். பெரியார் நகர்.ரூ.200.

திருமதி பிச்சையம்மாள்.பெரம்பூர். ரூ.100

திருமதி.பிரியா. அயனாவரம். ரூ.101

திருமதி. வரலட்சுமி பிரபாகரன் அயனாவரம்.ரூ.101

சிவா அரிசி மளிகை ரூ.50.

பெரியார் நகர் பாபா பக்தர்கள் ரூ.50

திரு.அகஸ்டின் குடும்பத்தார். குன்றத்தூர். அரிசி 1 மூட்டை

திருமதி.உமா சக்திவேல், AYK ரூ.200

திருமதி.சாந்தி மோகன், AYK ரூ.100

திருமதி.அபிராமி அசோக் AYK ரூ.100

**என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.**



# சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 150 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 400 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 1,500 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**V. ஸ்ரீராம், ஆசிரியர்**
**'சாயி மகராஜ் குருவை தேடி',**
**17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,**
**அயனாவரம், சென்னை – 600 023.**

**ஆன்லைன் முலம் காணிக்கை, சந்தா செலுத்த...**

**V.SRIRAM**
**INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai**
**AC.No: 6219480677**
**IFS Code No: IDIB000P056.**

## புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு. ராஜராஜன்.திருவாரூர்.ரூ.500
திருமதி. பானுமதி. சேலம். ரூ.300
திருமதி. சார்மிளா. ஓசூர். ரூ.300
திருமதி.ஜெயலட்சுமி தேவக்குமார். பெரவள்ளூர்.ரூ.200..
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர். ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.

# சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.400/ மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

**ரூ.501/மதிப்புள்ள அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!**

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, கும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசி எண்: 88258 31068.**

**தாயத்து காணிக்கை: 501/ மட்டுமே**

**பணம் அனுப்பவேண்டிய முகவரி:**

**V. SRIRAM,**
**INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.**
**A/C.NO: 62 19 48 06 77,**
**IFS CODE: IDIB000P056.**

**G- PAY, PHONE PAY, NO: 99418 16692**







எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு




## அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

## குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.




தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.